விலை ரூ.15 – மலர் 21 – இதழ் 06 – அக்டோபர் 2019

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரித்த பொருட்களின் விற்பனைக் கண்காட்சி

திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

அக்டோபர் 2019

அன்பு சகோதரிகளே,

முற்றம் இதழின் வாயிலாக உங்களை சந்திப்பதும், உங்களுடன் எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

“மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா” என்ற பாடல் வரிகளுக்கு எடுத்துக்காட்டாக இன்று சுய உதவிக் குழு மகளிர் திகழ்ந்து வருகின்றனர். குக்கிராமத்தில் உள்ள பெண்களும் இன்று சுய உதவிக் குழுவில் இணைந்து தொழில் முனைவோர்களாக முன்னேறி வாழ்வில் வெற்றி பெற்று வருகின்றனர்.

“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்” என்ற கூற்றுக்கேற்ப சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களாகிய நீங்கள் இன்று அனைத்துத் துறைகளிலும் முத்திரையைப் பதித்து வருவது மேலும் சிறப்பிற்குரியது. உங்களுக்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசும் மகளிருக்கான பல்வேறு திட்டங்களைத் தீட்டியும், அதை சிறப்பாக செயல்படுத்தியும் வருகிறது.

வேலைக்குச் செல்லும் பெண்களின் சிரமத்தைக் குறைக்கும் வகையில் மானிய விலையில் அம்மா இருசக்கர வாகன திட்டம், ஊட்டச் சத்து தோட்டம் அமைக்க நிதி உதவி, சுய உதவிக் குழு மகளிருக்கு வங்கிக் கடன் இணைப்பு, இயற்கை வேளாண்மை பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடும் மகளிரின் உற்பத்திப் பொருட்களின் சந்தை, சுய உதவிக் குழு மகளிர் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க விற்பனைக் கண்காட்சிகள், வேலை வாய்ப்பு மற்றும் தொழில் முனைவோருக்கான பல்வேறு பயிற்சிகள் போன்ற பல்வேறு திட்டங்களை மகளிருக்காகவே நமது தமிழ்நாடு அரசும் எவ்வித சுணக்கமுமின்றி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வாயிலாக செயல்படுத்தி வருகிறது.

எனவே அரசின் இத்திட்டங்களை அனைத்து மகளிர் சுய உதவிக் குழுவினரும் பயன்படுத்தி மேலும் வளர்ச்சி பெற வேண்டும்; பொருளாதார சுய சார்பு பெற வேண்டும்; சுய உதவிக் குழு மகளிர் எதையும் சாதிப்பார்கள் என்பதை பிறர் உணரும் வகையில் உங்களின் செயல்பாடுகள் இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்.

இன்று நாம் வாழும் இந்த பூமியில் சுற்றுச்சூழல் குறித்தான பிரச்சனை ஓர் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. நம் முன்னோர்களின் தொலைநோக்குப் பார்வையின் காரணமாக அவர்களால் விதைக்கப்பட்ட விதைகள் இன்று மிகப் பெரிய விருட்சமாக வளர்ச்சியடைந்து, மரங்களாகவும், நாட்டின் பல பகுதிகளிலும் அடர்ந்த காடுகளாகவும் இருந்து மழை பெய்யவும், வேளண்மை வளம் பெறவும் நமக்கு உதவி புரிந்து வருகின்றன.

ஆனால் அவ்வகையிலான மரங்களை இன்றைய காலங்களில் பெருமளவில் வெட்டப்பட்டு, காடுகளும் அழிக்கப்பட்டு வருவது மிகவும் வருத்தத்திற்குரியது. இதனால் சுற்றுச்சூழலில் பெரும் மாற்றம் ஏற்பட்டு பெரிய அளவிலான பாதிப்பை மனித குலம் சந்திக்க நேரிடும். வறட்சி, வெப்பம், குளிர், புயல், வெள்ளம் உள்ளிட்ட பல்வேறு இயற்கை இடர்பாடுகளினால் நாம் பாதிப்படைந்து வருகிறோம். வரும் காலங்களில் இது இன்னும் தீவிரமாகும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

எனவே இந்நிலையை மாற்ற நாம் முன் வர வேண்டுமாயின் முதலில் ஒவ்வொரு சுய உதவிக் குழு உறுப்பினரும் தங்களின் பகுதியில் மரங்களை நட்டு பராமரித்து வளர்க்க வேண்டும். “சிறு துளி பெருவெள்ளம்” என்பது போல் உங்களால் விதைக்கப்படும் ஒவ்வொரு மரமும் நம் எதிர்கால சந்ததியினரின் வாழ்விற்கு வளமும், நலமும் சேர்க்கும். உங்களின் இந்த செயல் மற்றவர்களின் மனதிலும் மாற்றத்தை ஏற்படுத்தும். இதனால் நமது பூமியின் வளமும் காக்கப்படும் என்பதை அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும். “நன்றே செய்வோம், நன்றும் இன்றே செய்வோம்” என்று உறுதி கொண்டு “மரங்களைக் காத்து மனித வளம் காப்போம்” என அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

ச.ப.கார்த்திகா

மேலாண்மை இயக்குநர்

குறளும்-பொருளும்

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்

ஒருவர் தான் உண்ட உணவு செரிப்பதற்கான கால இடைவெளி தந்து, உணவு உண்பாராயின் அவர் உடலுக்கு வேறு மருந்தே தேவையில்லை.

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் | wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

protncdw1@gmail.com

உள்ளே...

மதராசபட்டினம் விருந்து - வாங்க ரசிக்கலாம், ருசிக்கலாம் 05
மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களின் நேரடி விற்பனைக் கண்காட்சி 07
பணி நியமன ஆணைகள் வழங்கும் விழா 08
அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்தின் கீழ் மானியம் வழங்குதல் 11
தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் செயல்பாடுகள் 12
வேளாண் மகளிரின் விளை பொருட்களுக்கான விற்பனை கண்காட்சி 14
மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள் 21
முற்றக் கச்சேரி 24
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 26
அம்மா இருசக்கர வாகனம் பெற்ற பயனாளிகளின் மகிழ்ச்சி பகிர்வு 30
நேரடிக் களப்பார்வை 33

➜ முற்றம் வாசகர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

அச்சு மற்றும் வெளியீட்டு செலவினங்கள் அதிகரித்துள்ள காரணத்தினாலும், தற்போது மாறிவரும் சூழலுக்கேற்ப முற்றம் இதழை புதிய தொழில்நுட்ப வடிவில் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ள காரணத்தினாலும் சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாக விளங்கி வரும் நமது முற்றம் இதழின் விற்பனை விலை மற்றும் ஆண்டு சந்தா கட்டணங்கள் வருகிற 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்பட உள்ளது என்பதை அனைத்து முற்றம் வாசகர்களுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றம் இதழின் தனிப்பிரதி / சந்தா விபரம்	தற்போதைய விலை	ஜனவரி 2020 முதல் மாற்றம் செய்யப்படவுள்ள புதிய விலை	ஜனவரி 2020 முதல் முற்றம் வாசகர்களுக்கான சலுகை விலை
முற்றம் இதழின் தனிப்பிரதி	ரூ. 15	ரூ. 20	ரூ. 20
ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180	ரூ. 240	ரூ. 200 (தள்ளுபடி ரூ. 40)
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360	ரூ. 480	ரூ. 400 (தள்ளுபடி ரூ. 80)
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540	ரூ. 720	ரூ. 600 (தள்ளுபடி ரூ. 120)

முற்றம் இதழின் வாசகர்கள் அளித்து வரும் தங்களின் ஆதரவினை இவ்இதழுக்குத் தொடர்ந்து வழங்கி உற்ற தோழியாய், உறுதுணையாய் என்றும் இருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– முற்றம் இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

மலர் 21
இதழ் 06
அக்டோபர் 2019
விலை ரூ.15

- **கௌரவ ஆசிரியர்கள்**

  திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
  மேலாண்மை இயக்குநர்,
  தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
  முதன்மை செயல் அலுவலர்,
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

  முதன்மை செயல் அலுவலர்,
  தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

  முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
  செயல் இயக்குநர்,
  தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்**

  எஸ். சின்னப்பன், செயலர், முற்றம்

- **ஆசிரியர் குழு**

  கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்,
  ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

  பா. செல்வராஜன், கூடுதல் இயக்குநர்,
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

  ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்,
  தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

  ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்,
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

  ஜி. சரஸ்வதி கணேசன், கூடுதல் இயக்குநர்,
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

  சி. கே. வீரணன், கூடுதல் இயக்குநர்,
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

- **நிர்வாக ஆசிரியர்**

  ச. சந்தோஷினி சந்திரா, பொது மேலாளர்,
  தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **நிதி நிர்வாகம்**

  அ. நிருபா ராணி, நிதி ஆலோசகர்,
  தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்**

  கூ. பாபு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
  தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **துணை ஆசிரியர்: ஏ. கண்ணன்**
- **முதுநிலை கணக்காளர்: சு. சசிகலா**
- **பிழை திருத்துபவர்: எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
- **கணினி வடிவமைப்பு: டி. ராஜரத்தினம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை 600 034.

தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

உன்னத பணி - ஆசிரியர் பணி

அன்புள்ள வாசகர்களுக்கு,

ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக கொண்டாடப்படும் முக்கிய தினங்களில் ஒன்று 'ஆசிரியர் தினம்'. இறைவனுக்கு நிகராக ஆசிரியர்களுக்கும் இந்த சமுதாயம் பெரும் மதிப்பை அளித்து வருகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இந்த தினத்தின் முக்கிய நோக்கம், எழுத்து அறிவிக்கும் ஆசான்களுக்கு நன்றி கூறுவதோடு, ஆசிரியர்கள் தங்களின் சமுதாயப் பொறுப்பை உணர்ந்து மாணவர்களிடம் உற்சாகமாக தமது கற்பித்தல் பணியை தொய்வின்றி மேற்கொள்வதற்குமான நினைவூட்டும் தினம் ஆகும்.

ஆசிரியர்களின் பணிக்கான ஊதியம், அவர்களின் கல்வி தகுதிக்கேற்ற பணியிடங்கள், பணியில் தொய்வடையாமல் இருப்பதற்கு பல்வேறு பயிற்சிகள், கால மாற்றத்திற்கேற்ப பாடம் கற்பிப்பதற்கு முன் தயாரிப் பிற்கான ஆதார மையங்கள், தேர்தல் பணி மற்றும் கணக்கெடுப்பு பணிகள் போன்ற முக்கிய பணிகள் ஆசிரியர்களிடம் நம்பகத்தன்மையுடன் அளித்திருப்பது, கற்பித்தல் பணியில் அர்ப்பணிப்போடு செயல்படும் சிறந்த ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்கி கௌரவிப்பது, பணி நிறைவுக்கு பிறகும் ஓய்வு ஊதியம் வழங்குவது உள்ளிட்ட பல்வேறு ஊக்க செயல்களின் மூலம், தமிழக அரசு நாளைய சமுதாயத்தை உருவாக்கயிருக்கும் மாணவர்களின் நலனில் அக்கறையுடன் செயல்படும் ஆசிரியர்களை உற்சாகப்படுத்தி வருவது பாராட்டுக்குரியது.

ஆசிரியர்களுக்கு இப்படிப்பட்ட சிறப்புகளை அரசு செய்வதற்கு முதற்காரணம், கற்பிக்கும் பணியினை சிற்பிகளாயிருந்து செதுக்கி, சிறந்த சிற்பங்களை செய்வதன் மூலம், நம் நாட்டையும் நாட்டு மக்களையும் உருவாக்கும் உன்னதமான பணியை செய்பவர்கள் ஆசிரியர்கள் என்பதால்தான். சமுதாயமும் ஆசிரியர் பணியை மிகவும் மதிப்புமிக்கதாகக் கருதி வருகிறது. எனவே, ஆசிரியர்கள் சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

நிலவிற்கு விண்கலத்தை அனுப்பி ஆய்வு செய்யும் அளவிற்கு அறிவை வளர்த்து பல அறிவியல் வல்லுநர்களையும், விண்வெளி ஆராய்ச்சியாளர்களையும் உருவாக்கியதும் ஆசிரியர்கள்தான். குறிப்பாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஒரு தமிழர் என்பது பெருமைக்குரியதாகும். கல்வித் துறையில் வியப்புக்குரிய அளவிற்கு பல நல்ல மாற்றங்களை தமிழக அரசு எடுத்து வரும் இச்சூழலில், ஆசிரியர்களுக்கு முற்றம் தனது வாழ்த்துகளையும் அவர்களின் பணிகளுக்கு பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களான நீங்கள் உங்கள் குழந்தைகளைத் தவறாமல் பள்ளிக்கு அனுப்பி கல்வி கற்கச் செய்ய வேண்டும். கல்விதான் குழந்தைகளின் நாளைய சொத்து என்பதை என்றும் மறவாமல் படிக்கச் செய்ய வேண்டும். கல்வி எவ்வளவு முக்கியமோ அதேபோன்று அதை கற்பிக்கும் ஆசிரியர்களும் போற்றுதலுக்குரியவர்கள் என்பதை உணர்ந்து, ஆசிரியர் பணியைப் போற்றி பாராட்டுவது நமது கடமையாகக் கொள்வோம்.

இப்படிக்கு,

எஸ். சின்னப்பன்
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

மதராசபட்டினம் விருந்து

வாங்க ரசிக்கலாம், ருசிக்கலாம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 13.09.2019 அன்று மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை உணவு பாதுகாப்புத் துறையினால் நடத்தப்பட்ட 'மதராச பட்டினம் விருந்து-வாங்க ரசிக்கலாம், ருசிக்கலாம்' என்ற நிகழ்ச்சியை துவக்கி வைத்து ஆற்றிய உரை விபரங்கள் பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

நாம் உட்கொள்ளும் உணவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த மக்கள் நல்வாழ்வுத் துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'மதராசபட்டினம் விருந்து வாங்க ரசிக்கலாம், ருசிக்கலாம்' என்ற இந்த நிகழ்ச்சியில் கலந்துக் கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

உணவே மருந்து மருந்தே உணவு என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் இன்று உணவு என்பது அலங்காரப் பொருளாக மாறிவிட்டது. வெவ்வேறு நாட்டின் உணவு வகைகளுக்கும், விதவிதமான சமையல் வகைகளுக்கும், நமது நாக்கு அடிமையாகி விட்டது. ஆனால் நாம் ஆரோக்கியமான வாழ்வு வாழ நமது முன்னோர்கள் உட்கொண்ட ஆரோக்கியமான சத்தான உணவுகளையே, உட்கொள்ள முன் வரவேண்டும்.

"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து"

-என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். அதாவது முன்னர் நாம் சாப்பிட்ட உணவு நன்கு செரித்தபின், நம் உடம்பிற்கு ஏற்ற உணவினை நன்கு அறிந்து, பசியெடுத்த பின்னரே உண்ண வேண்டும். இதை நாம் தவறாது கடைப்பிடித்தால், நோய்கள் நம்மை அண்டாது.

இந்தியா முழுவதும் அமலுக்குக் கொண்டு வரப்பட்ட உணவுப் பாதுகாப்புத் தரங்கள் சட்டம் 2006ன்படி பொதுமக்களுக்குப் பாதுகாப்பான, சத்தான, சுகாதாரமான, செறிவூட்டப்பட்ட, சரிவிகித உணவைத் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த அக்கறையோடு தமிழ்நாடு அரசால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் நடைபெறவிருக்கின்ற 'மதராசபட்டினம் விருந்து வாங்க ரசிக்கலாம், ருசிக்கலாம்' என்ற நிகழ்ச்சியை துவக்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்பொழுதெல்லாம் இளம் வயதிலேயே மக்களுக்கு இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், இதய சம்பந்தப்பட்ட நோய் ஆகியவை பெருகி வருவதற்கு முதல் காரணம், நமது உணவுப் பழக்க வழக்கமே.

நமது முன்னோர்கள் பாரம்பரிய உணவு வகைகளான சாமை, கேழ்வரகு, தினை, குதிரைவாலி, கம்பு, சோளம் போன்ற இதர நவதானியங்களை அன்றாட உணவில் பயன்படுத்தியதனாலும், அதற்கேற்ப உடல் உழைப்பை மூலதனமாக கொண்டு வாழ்ந்ததினால்தான், அன்றைக்கு அவர்களுக்கு இரத்த அழுத்தம், மாரடைப்பு, நீரிழிவு நோய் போன்றவை அரிதாக காணப்பட்டது.

நமது அன்றாட வாழ்வில் பாரம்பரிய உணவுப் பழக்கத்தோடு உடற்பயிற்சியும் மேற்கொண்டு நாம் ஆரோக்கியமாக வாழ வேண்டும் உடற்பயிற்சி எவ்வாறு உடலுக்கு வலிமையாக்குகிறதோ, அதுபோன்றே மனதை புத்துணர்ச்சியூட்ட யோகா மற்றும் தியான பயிற்சிகள் அவசியமாகிறது.

இதனை நமது மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள், 'Fit India' (ஃபிட் இந்தியா) என்ற திட்டத்தின் மூலம் இந்தியா முழுவதும் நடைமுறைப்படுத்தியுள்ளார்கள்.

மத்திய உணவுப் பாதுகாப்புத் தர நிர்ணய ஆணையரகம் கடந்தாண்டு அக்டோபர் மாதம் தேச பிதா மகாத்மா அவர்களின் 150வது பிறந்த நாளை ஆண்டு முழுவதும் கொண்டாடும் வகையில் பல திட்டங்களை அறி வித்தது. தமிழ்நாட்டில் நடைபெற்ற இப்பயணத்தில், வழியெங்கும் உணவுப் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து 'குறைந்த உப்பு', 'குறைந்த சர்க்கரை', 'குறைந்த கொழுப்பு' என்ற தாரக மந்திரத்தினை அடிப்படையாக கொண்டு பொதுமக்கள் அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நமது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த சிறந்த நடவடிக்கைகளுக்கு மகுடம் சூட்டும்

வகையில் தமிழ்நாடு உணவுப் பாதுகாப்புத்துறை இந்தியாவில் முதல் சிறந்த மாநிலமாகவும், சிறந்த நகரமாக மதுரையும் மற்றும் சிவகாசியும் தேர்வு செய்யப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள பல்வேறு உணவு வணிகர்களை தேர்ந்தெடுத்து அவர்களை ஒருங்கிணைத்து அவர்களது உணவின் சிறப்பை பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையில் இந்த விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விருந்தின் முக்கிய அம்சமாக அடுத்த 3 நாட்களுக்கு பல்வேறு சுவைகளை நமக்கு படைக்க 160 உணவு அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. **தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சுய உதவி குழுக்கள் / அங்கன்வாடி பணியாளர்களின் உணவு அரங்கங்கள் மற்றும் பல்வேறு மாவட்டத்தை சார்ந்த சிறப்பு உணவு அரங்கங்கள் இடம் பெறுகின்றன. விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், வினாடி வினா, கலந்தாய்வு மற்றும் செய்முறை விளக்கங்கள், முக்கிய பிரமுகர்களின் உரைகள், பட்டிமன்றம் மற்றும் சமையல் வல்லுநர்களின் ஆரோக்கியமான சமையல் செய்முறைகள் குறித்த விளக்கம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஆகியவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.**

முன்பெல்லாம் கேப்பை களி, வரகரிசி சோறு, கம்பு தோசை, தேன் கலந்த தினைமாவு போன்ற சிறு தானியங்கள்தான் பெருவாரியான நம் மக்களின் உணவாக இருந்தது. வரகு, சாமை, கம்பு, சோளம், தினை, குதிரைவாலி போன்ற தானியங்களைச் சமைத்து உண்பதன் மூலம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்; கொழுப்பு சத்து குறையும்; உடலுக்கு நல்ல ஊட்டச் சத்து கிடைக்கும். உடல் நலன் பாதுகாக்கப்படும். எனவே நமது முன்னோர்கள் வழங்கிச் சென்ற உணவு வகைகளை மீண்டும் உட்கொள்ள ஆரம்பித்தால், நாம் அனைவரும் நல்ல உடல் ஆரோக்கியத்தைப் பெற்று சுகமாக வாழ முடியும்.

நமது உடல் நலத்திற்காக பின்பற்றப்பட வேண்டிய வாழ்க்கை முறைகள், உண்ண வேண்டிய சத்தான உணவு வகைகள், உடல் ஆரோக்கியத்திற்கான ஆலோசனைகள் ஆகியவற்றை வழங்குவதற்காக நடத்தப்படும் இந்த நிகழ்ச்சியில் பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொண்டு, ஆலோசனைகளைப் பெற்று, ஆரோக்கியமான தமிழ்நாட்டினை சமுதாயத்தினை உருவாக்க வேண்டும் என அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே வேளையில் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற பழமொழிக்கேற்ப, யார் ஒருவருக்கு நோய் இல்லையோ, அவர் மிகுந்த செல்வந்தராக வாழ முடியும். எவ்வளவுதான் செல்வம் நம்மிடத்திலே இருந்தாலும், சர்க்கரை நோய் வந்துவிட்டால், சர்க்கரையால் செய்யப்பட்ட உணவுப் பண்டங்களை வேடிக்கை தான் பார்க்க முடியும், உண்ண முடியாது. ஆனால், சர்க்கரை நோய் இல்லாத ஒரு ஏழையாக இருந்தாலும் கூட, சர்க்கரையால் செய்யப்பட்ட உணவுப் பண்டங்களை அள்ளி, அள்ளி வயிறு நிரம்ப சாப்பிடலாம். எனவே, தான் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று பழமொழியில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதேபோல, ரத்தக் கொதிப்பு, சர்க்கரை நோய் ஆகியவை வருவதற்கு முன்பு நான் சொன்னவற்றையெல்லாம் பின்பற்றினால் இவை வராமல் தடுக்கலாம், வந்துவிட்டால் அதை நாம் கட்டுப்பாட்டுக்குள் தான் வைத்திருக்க முடியும். ஆகவே, வராமல் இருப்பதற்கு என்னென்ன வழிமுறைகள் தேவையோ அதை அரங்கிலே ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

அதேபோல, மழை நீர் சேகரிப்பைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பிளாஸ்டிக் ஒழிப்பு பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், டெங்கு ஒழிப்பு பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் விழைகின்ற மிகப் பிரம்மாண்ட பேரணியை இந்த நிகழ்ச்சி முடிந்தவுடன் துவக்கி வைக்கின்றேன் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

நாம் மறந்து கைவிட்ட நமது முன்னோர்களின் பாரம்பரிய உணவை நமது அன்றாட வாழ்வில், இனிமேல் தினசரி எடுத்துக் கொண்டு நலமுடன் வாழ உறுதி ஏற்போம் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தெரிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, இந்த மதராசப் பட்டினம் விருந்திலே தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வந்திருக்கின்ற பல்வேறு அறுசுவைகள் நிறைந்த 160 உணவு அரங்கங்கள் அமைக்கப்பட்டிருந்ததை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, பல்வேறு உணவு அரங்கங்களில் உள்ள உணவுகளை ஆர்வமுடன் சாப்பிட்டு ருசி பார்த்தார்.

அதனைத் தொடர்ந்து, மழை நீர் சேகரிப்பு, பிளாஸ்டிக் மற்றும் டெங்கு ஒழிப்பு பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான பிரம்மாண்டமான பேரணியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களின்

நேரடி விற்பனைக் கண்காட்சி

நவராத்திரி 2019 விற்பனை கண்காட்சியினை அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் 19.09.2019 அன்று துவக்கி வைத்து பார்வையிட்டனர்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறும் தமிழக அரசு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பாக மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு

திட்டங்களைத் தீட்டியும், அதனை முறையாக நடைமுறைப்படுத்தியும் வருகிறது. அதில் ஒருபகுதியாக மகளிர் சுய உதவிக் குழுவினரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் கிராம அங்காடிகள், கல்லூரி சந்தைகள், வட்டார, மாவட்ட, மாநில அளவிலான கண்காட்சிகள் மற்றும் தேசிய அளவில் சாரஸ் கண்காட்சிகள் வாயிலாக ஆண்டுதோறும் விற்பனை செய்வதற்கு ஏதுவாக பல்வேறு விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் மூலம் ஏராளமான மகளிர் சுய உதவிக் குழுவினரின் உற்பத்திப் பொருட்கள் நேரடியாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழுவினரால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதோடு, வாடிக்கையாளர்களும் தரமான பொருட்களை நியாயமான விலையில் கொள்முதல் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாக்கப்படுகிறது.

இந்த நவராத்திரி விற்பனைக் கண்காட்சி 2019 செப்டம்பர் 19ஆம் தேதி முதல் அக்டோபர் 18ஆம் தேதி வரை நாள்தோறும் காலை 10.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நடைபெறுகிறது

இந்த நவராத்திரி விற்பனைக் கண்காட்சியின் துவக்க விழாவில் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திருமதி. பா. வளர்மதி அவர்கள், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் விருகை திரு. வி. என். ரவி அவர்கள், தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. சத்யநாராயணன் அவர்கள், ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் / முதன்மைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் முதன்மை செயல் அலுவலர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தற்போது துவக்கி வைக்கப்பட்ட ``நவராத்திரி2019 விற்பனைக் கண்காட்சியில்" தமிழகத்தின் 32 மாவட்டங்களிலிருந்தும் 120 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டுள்ளனர். அக்குழுக்களின் சார்பாக 55 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கண்காட்சியில், பல்வேறு மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பட்டு, பருத்தி ஆடைகள், கைவினைப் பொருட்கள், மண்பாண்டப் பொருட்கள், செயற்கை ஆபரணங்கள், பல்வேறு உலோகங்களால் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்கள், தரமான வீட்டு உபயோகப் பொருட்கள், சணல், காகிதம், பனை ஓலை மற்றும் வாழை நார் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட பொருட்கள், பல்வேறு தோல் பொருட்கள், நவராத்திரி கொலு பொம்மைகள், வாசனைப் பொருட்கள், மரச் சிற்பங்கள், சுடுமண் சிற்பங்கள், மூலிகைப் பொருட்கள், பாரம்பரிய கிராமிய உணவு வகைகள், அனைவருக்கும் ஏற்ற தரமான ஆயத்த ஆடை வகைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான பொருட்கள் இக்கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக அறுசுவை மிகுந்த பாரம்பரிய உணவுகளை உண்டு மகிழ்வதற்கென தனி அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

2011ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை தமிழக அரசின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்திட எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் பலனாக இதுவரையில் 851 விற்பனை கண்காட்சிகள் மூலம் 22,327 மகளிர் சுய உதவிக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் ரூ.3,417.24 இலட்சம் மதிப்பில் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பது சிறப்பிற்குரியது. மேலும், உள்ளூர் விழாக்கள், அரசு பொது நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளின் மூலமாக மகளிர் சுய உதவிக் குழுவினர் தங்களது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திட தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னேற்பாடுகளை செய்து வருவது குறிப்பிடத்தக்கது. பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பினை முழுமையாக பயன்படுத்தி வருகின்றனர். இத்தகைய சிறப்பு மிக்க விற்பனைக் கண்காட்சிக்கு வருகை புரிந்து, மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட தரமான பொருட்களை வாங்கிப் பயனடைந்துள்ளனர் என்பது மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான வெற்றியைப் பிரதிபலிக்கிறது.

ரூ. 9.18 கோடி மதிப்பீட்டில் சானிடரி நாப்கின்கள் கொள்முதல் செய்வதற்கான பணி ஆணை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 91 ஒப்பந்த பணியாளர்களுக்கு

பணி நியமன ஆணைகள் வழங்கும் விழா

சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 19.09.2019 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பாக மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், ரூ. 9.18 கோடி மதிப்பீட்டில் நாப்கின்கள் கொள்முதல் செய்வதற்கான பணி ஆணை மற்றும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 91 ஒப்பந்த பணியாளர்களுக்கு பணி ஆணைகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் முன்னிலையில் வழங்கி ஆற்றிய விழாப் பேருரையின் விபரம் வருமாறு :

``மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறும் தமிழக அரசு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பாக மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டியும், அதனை முறையாக நடைமுறைப்படுத்தியும் வருகிறது. அதன் ஒருபகுதியாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தமிழ் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள சானிடரி நாப்கின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து தமிழ்நாடு சானிடரி நாப்கின் உற்பத்தியாளர் கூட்டமைப்பு (TNSANFED) என்ற பெயரில் ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இக்கூட்டமைப்பு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையால் செயல்படுத்தப்படும் மாதவிடாய் சுகாதாரத் திட்டத்திற்கு தேவைப்படும் பெல்ட் வகை சானிடரி நாப்கின்களை தங்களது கூட்டமைப்பில் இணைந்த மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் தயாரித்து விற்பனை செய்யும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

2018-19ஆம் ஆண்டிற்கு 36,00,000 பெல்ட் வகை சானிடரி நாப்கின் பாக்கெட்டுகளை மாதந்தோறும் 3,00,000 இலட்சம் பாக்கெட்டுகள் வீதம் வழங்கிட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு அரசு ஆணை வழங்கப்பட்டு இப்பணியை செய்து முடிக்கும் பொறுப்பு தமிழ்நாடு சானிடரி நாப்கின் உற்பத்தியாளர் கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்டது. அதனால் இதுவரை 46 மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் ரூ.4,40,49,348/- மதிப்பிலான 30,97,588 சானிடரி நாப்கின் பாக்கெட்டுகளை உற்பத்தி செய்து மாவட்ட சுகாதார மையங்களுக்கு விநியோகம் செய்து பயனடைந்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேற்பார்வையில் சானிடரி நாப்கின்கள் மகளிர் சுய உதவிக்குழுக்களால் தொய்வில்லாமல் உற்பத்தி செய்து விநியோகம் செய்ததை கருத்தில் கொண்டு தமிழ்நாடு மருத்துவ சேவை நிறுவனம் 2019-20 ஆம் ஆண்டிற்கான கொள்முதல் ஆணையை 36 இலட்சத்திலிருந்து 43.75 இலட்சமாக உயர்த்தி ஆணை வழங்கியுள்ளது இதனுடைய மொத்த மதிப்பு ரூ.9.18 கோடி ஆகும்.

தொலைநோக்கு பார்வை கொண்ட மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள், பெண்கள் தங்களது பணி யிடங்களுக்கு செல்வதில் உள்ள சிரமங்களை உணர்ந்து, இந்திய திருநாட்டிலேயே முதன்முறையாக, மகளிர் பணியிடங்களுக்கும், பிற வேலைகளுக்கும் எளிதில் செல்லும் வகையில் இரு சக்கர வாகனங்கள் (Moped/Scooter) வாங்க 50 சதவீத மானியம் வழங்கும் ஒரு முன்னோடி திட்டத்தினை தேர்தல் வாக்குறுதியாக அறிவித்திருந்தார்.

அந்த வாக்குறுதியினை நிறைவேற்றும் வகையில் இரு சக்கர வாகனங்கள் திட்டமானது 24.02.2018 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 2017-18 மற்றும் 2018-19 ஆம் ஆண்டுகளில்

தலா ரூ.252.50 கோடி அரசால் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டு இதுவரை 1,95,875 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் கியர் இல்லாத/ ஆட்டோ கியரில் இயங்கும் வசதியுடன் கூடிய 125சிசி-க்கு மிகாமல் தரமான புதிய இருசக்கர வாகனம் வாங்கிக் கொள்ள அதிகபட்ச மானியமாக, வாகன விலையில் 50 சதவீதமோ அல்லது ரூ.25,000/ இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு மேற்கண்ட மானியத் தொகைக்கு கூடுதலாக ரூ.6,250 சேர்த்து மொத்தம் ரூ.31,250/ மானியமாக வழங்கப்படுகிறது.

மேலும், 2019-20 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த தற்போது அரசாணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இருசக்கர வாகனம் பெற விரும்பும் தகுதியான பெண்கள், அவர்கள் வசிக்கும் பகுதிக்கு உட்பட்ட வட்டாரம்/பேரூராட்சி/நகராட்சி/மாநகராட்சி அலுவலகங்களில் விண்ணப்பங்களை சமர்பிக்கலாம். ஏற்கனவே விண்ணப்பங்கள் சமர்பித்து காத்திருப்பில் உள்ள தகுதியான விண்ணப்பங்களும் நடப்பாண்டில் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். எனவே தகுதியான பெண்கள் அனைவரும் இத்திட்டத்தில் பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையால் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களான ஒரு திட்ட மேலாளர் (வாழ்வாதாரம்) பணியிடம், மூன்று திட்ட செயற்பாட்டாளர் (கூடுகை மற்றும் கூட்டாண்மை) பணியிடங்கள், ஐம்பது உதவி திட்ட அலுவலர் பணியிடங்கள் மற்றும் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் தோற்றுவிக்கப்பட்ட நான்கு பணியிடங்கள், 32 உதவித் திட்ட அலுவலர் பணியிடங்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு செயற்பாட்டாளர் பணியிடம் உள்ளிட்ட பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த நபர்கள் ரிவார்டு சொசைட்டி என்னும் மனித வள மேம்பாட்டு நிறுவனம் மூலமாக தேர்வு செய்யப்பட்டு, மொத்தம் 91 நபர்களுக்கு மேற்கண்ட திட்டங்களின் கீழ் ஒப்பந்தப் பணியாளர்களாக பணிபுரிந்திட 19.09.2019 அன்று பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் ரூ. 9.18 கோடி மதிப்பீட்டில் நாப்கின்கள் கொள்முதல் செய்வதற்கான பணி ஆணை மற்றும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 91 ஒப்பந்த பணியாளர்களுக்கு பணி ஆணைகள் மற்றும் 2019-2020ஆம் ஆண்டிற்கான அம்மா இருசக்கர வாகன திட்ட செயலாக்கத்தினை துவக்கி வைக்கப்பட்டுள்ளது என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திருமதி. பா. வளர்மதி அவர்கள், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் விருகை திரு. வி. என். ரவி அவர்கள், தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. சத்யநாராயணன் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் / முதன்மைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், மாநில திட்டக் குழு துணைத்தலைவர் திருமதி. சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள், தமிழ்நாடு குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையத் தலைவர் திருமதி. எம். பி. நிர்மலா, இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் முதன்மை செயல் அலுவலர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குதிரைவாலி தோசை

பிரண்டை பசி உணர்வை தூண்டும். குதிரைவாலி அரிசி வயிற்றுக் கோளாறுகளைத் தீர்க்கும். இவை இரண்டையும் வைத்து சத்தான பிரண்டை குதிரைவாலி தோசை செய்வது பற்றி இந்த பகுதியில் பார்ப்போம் வாங்க..!

தேவையான பொருட்கள்:

குதிரைவாலி அரிசி-2 கப், உளுந்தம் பருப்பு 1/4 கப், நுனிக் கொழுந்து பிரண்டை துண்டுகள்-10, வெந்தயம்-சிறிதளவு. உப்பு மற்றும் நல்லெண்ணெய் தேவையான அளவு.

செய்முறை:

குதிரைவாலி, வெந்தயம் மற்றும் உளுந்து ஆகியவற்றை தனித்தனியாக மூன்று மணி நேரம் ஊறவைக்க வேண்டும். பின்பு ஒன்றாக சேர்த்து தோசை மாவு பதத்திற்கு அரைத்து கொள்ளவும். பின்பு உப்பு சேர்த்து கலந்து வைத்து கொள்ளவும். பிரண்டையை தோல் நிக்கி சிறுசிறு துண்டுகளாக நறுக்கி எண்ணெயில் வதக்கிக் கொள்ளவும். வதக்கிய பிரண்டை ஆறியவுடன் குதிரைவாலி மாவுடன் சேர்த்து நன்றாக கலந்து, 8 மணி நேரம் வரை அப்படியே வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் மாவு புளித்திருக்கும். பிறகு தோசை கல்லில் தோசையாக ஊற்றி, தோசை வெந்ததும் திருப்பி போட வேண்டும். தோசை இருபுறமும் வெந்ததும் எடுக்க வேண்டும். இந்த தோசையை காரச் சட்னியுடன் சேர்த்து சாப்பிட்டால் மிகவும் சுவையாக இருக்கும். பெரியவர் சிறியவர் என அனைவரும் சாப்பிட ஏற்றது.

உடலுக்கு நன்மை தரும் நாவல் பழம்!

நாவல்பழம் சிறந்த மருத்துவ குணம் வாய்ந்தது, பழம், விதை, இலை, பட்டை என்று அனைத்துமே சித்த மருத்துவத்தில் அதிகளவு பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய மருத்துவ குணங்கள் நிறைந்த நாவல் பழத்தை தினமும் சாப்பிட்டு வந்தால் நம் உடலுக்கு கிடைக்கும். நன்மைகளை பற்றி தெரிந்து கொள்வோம் வாங்க.

நாவல்பழத்தில் கால்சியம், ஆன்டிஆக்ஸிடென்ட் மற்றும் வைட்டமின் பி1, பி2, பி5 ஆகிய சத்துக்கள் அதிகமாக இருக்கிறது. எனவே தினமும் நாவல்பழத்தை சாப்பிட்டு வந்தால், எலும்பு பலமாக இருக்கும். உடலுக்கு அதிக ஊட்டச்சத்து கிடைக்கும். தோல்களில் ஏற்படும் சுருக்கங்கள் தடுக்கப்படும். வாய் முதல் குடல் வரை உள்ள புண்கள் குணமாகும். பசியைத் தூண்டும். கல்லீரல் மற்றும் மண்ணீரல் நோய்கள் தடுக்கப்படும்.

மேலும் நாவல்பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் ரத்தம் விருத்தி அடைகிறது. வெண்புள்ளி, அரிப்பு நோய்களை விரைவாக சரிசெய்யும் தன்மை நாவல்பழத்திற்கு உள்ளது. ஆன்டிபயாடிக் பண்புகள் நிறைந்த நாவல் பழத்தை இதனை தினமும் சாப்பிடும்போது உங்கள் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு கணிசமாக குறையும். சர்க்கரை நோய் வராமலும் தடுக்கும்.

நாவல் பழத்தில் அதிக அளவு ஆன்டிஆக்ஸிடண்ட்ஸ் மற்றும் வைட்டமின் சி உள்ளது. இது புற்று நோய் வராமல் காக்க உதவுகின்றது. தினமும் நாவல் பழம் உண்பவர்களுக்கு 30 சதவீதம் புற்றுநோய் ஏற்படுவது குறைவு என பலவித ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

குறிப்பு:

நாவல் பழத்தை வெறும் வயிற்றில் சாப்பிடுவதை தவிர்த்து கொள்ளவும். அதேபோல் நாவல் பழம் சாப்பிட்ட உடனே பால் அருந்தக் கூடாது. முக்கியமாக நாவல் பழங்களை அளவுக்கு அதிகமாக எடுத்துக் கொண்டால், உடல் வலி மற்றும் காய்ச்சலுக்கு வழிவகுக்கும்.

அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்தின் கீழ்

மானியம் வழங்குதல்

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னத திட்டமான பணிக்கு செல்லும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பெண்களுக்கு மானிய விலையில் இருசக்கர வாகனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

நீலகிரி மாவட்டம்

நீலகிரி மாவட்டத்தில் 14.09.2019 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் 250 பயனாளிகளுக்கு அம்மா இருசக்கர வாகன மானியத் தொகை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி. ஜே. இன்னொசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள், அரசுத் துறை அதிகாரிகள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டம்

ஈரோடு மாவட்டம், பவானி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 10.08.2019 அன்று நடைபெற்ற அம்மா இரு சக்கர வாகனம் வழங்கும் விழாவில், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி. கருப்பணன் அவர்கள் உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் திட்டத்தின் மூலம் பவானி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 286 பயனாளிகளுக்கு ரூ. 71.50 இலட்சத்திற்கான மானிய விடுவிப்பு ஆணையை வழங்கினார்கள். இவ்விழாவில் மகளிர் திட்டத்தின் உதவி திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டம்

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 18.09.2019 அன்று நடைபெற்ற Poshan Abhiyaan நிகழ்ச்சியில் பிளாஸ்டிக் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு கோலப் போட்டி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் கலந்து கொண்டு சுய உதவிக் குழுவினர் வரைந்திருந்த பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு கோலங்களைப் பார்வையிட்டதுடன், 10 பயனாளிகளுக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. ம. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு. சண்முகநாதன் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ச. சா. தனபதி, மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மாவட்ட திட்ட அலுவலர் திருமதி. எஸ். முத்துலெட்சுமி ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் செயல்பாடுகள்

மத்திய ஊரக அமைச்சக அலுவலர்கள் குழு ஆய்வு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படும் தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட்டுள்ள ஆய்வு மேற்கொள்ள மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சக அலுவலர்கள்அடங்கிய குழு நேரில் பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொள்ள 2019 ஆகஸ்ட் 30 மற்றும் 31 ஆகிய இரண்டு நாட்கள் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தனர்.

மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின் திறன் வளர்ப்பு பயிற்சிக்கான இணைச் செயலர் திரு. சரண்ஜித் சிங், இ.வ.ப., அவர்கள், மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகத் துறை ஆலோசகர் திரு. சாரதா பிரசாத், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள், இணை இயக்குநர் திரு. சந்தீப் சர்மா அவர்கள் மற்றும் அலுவலர்கள் திரு. டான்மாய் கட்டக் அவர்கள், திரு. ஆஸிதொஷ் ஆகியோர் அடங்கிய குழுவினர் தீன்தயாள் உபாதியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினர்.

முதல் நாள் நிகழ்வில், மத்திய கப்பல் போக்குவரத்துக் துறை மற்றும் மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகத்துடன் இணைந்து AMETபல்கலைக் கழகத்துடன் இணைந்து நடத்தப்படும் 'சாகர்மாலா' எனும் கடல்சார்ந்த பகுதி மக்களின் முன்னேற்றத்திற்கான திறன் வளர்ப்பு பயிற்சித் திட்டம் மேற்படி மத்திய அலுவலர் குழுவினரால் துவக்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் AMET பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திரு. ஜெ. இராமச்சந்திரன் அவர்கள் மற்றும் இணை வேந்தர்கள், துணை வேந்தர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பின்னர் மத்திய அலுவலர் குழு ஓரகடத்தில் UDS எனும் முன்னணி நிறுவனத்தினரால் செயல்படுத்தப்படும் DDU-GKY திட்டத்தின் பயிற்சி வகுப்புகளைப் பார்வையிட்டு, அங்குள்ள பயிற்சி மாணவர்களுடன் உரையாடினர்.

அதனைத் தொடர்ந்து DDU-GKY திட்டப் பணிகளைப் பார்வையிடும் பொருட்டு திருவள்ளூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் இளைஞர் ஒருங்கிணைப்பு முகாம் நடவடிக்கைகளையும், ஊரக வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தின் RSETI பணிகளையும் பார்வையிட்டு பாராட்டினர். இந்நிகழ்வின் போது திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. மகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஜெயக்குமார் அவர்கள், RSETI-ன் இயக்குநர் ஆகியோர், ஆய்வுக் குழுவினருக்கு திட்டப் பணிகளின் செயல்பாட்டை விளக்கிக் கூறினர்.

தொடர்ந்து இரண்டாம் நாளின் முதல் நிகழ்வாக, DDU-GKY திட்டத்தின் கீழ் இளைஞர்களின் வேலைவாய்ப்பிற்காக அமைக்கப்பட்ட அழைப்பு மையத்தினைப் பார்வையிட்டு அதன் செயல்பாடுகள் குறித்த விபரங்களைக் கேட்டறிந்தனர்.

பின்னர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தலைமையகமான சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 2018-2019ஆம் ஆண்டிற்கான சிறந்த பயிற்சி நிறுவனங்களுக்கான விருதுகளை10 நிறுவனங்களுக்கு வழங்கி, அந்நிறுவனங்களைப் பாராட்டியதுடன், NASCOM, TMI, Loyal Textiles, ISS குழுமம் ஆகிய முன்னணி தொழில் நிறுவனங்களுடன் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மத்திய அலுவலர் குழு முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் இளைஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளித்தல், வேலைவாய்ப்பு முகாம்களில் கலந்து கொள்ளுதல் மற்றும் DDU-GKY திட்டத்தின் கீழ் பல்வேறு நிறுவனங்களில் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல் ஆகிய முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாகும்.

மேலும் இந்நிகழ்ச்சியில் DDU-GKY திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தொழிற்பயிற்சிகளை நிறைவு செய்த சுமார் 100 இளைஞர்களுக்கு பல்வேறு முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பில் அமர்த்தியதற்கான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. பயிற்சி முடித்து வேலை வாய்ப்பு பெற்ற இளைஞர்களின் வெற்றிக் கதைகள் அடங்கிய ‘இளைஞர்களின் குரல்’ (Voice of Youth) எனும் புத்தகம் மற்றும் DDU-GKY - தமிழ்நாடு திட்டத்தின் கீழ் அயல்நாட்டில் வேலைவாய்ப்பு” எனும் தலைப்பிலான ஒலி, ஒளி வட்டு (CD)வெளியிடப்பட்டது.

நிகழ்ச்சியின் நிறைவாக தேசிய அளவில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் DDU-GKY திட்டப் பணிகளை முன்மாதிரியாகவும், சிறப்பாகவும் முன்னெடுத்துச் செல்வதாக மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சக குழுவினர் பாராட்டு தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சிகளை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், DDU-GKY திட்ட இயக்கு அலுவலர் திரு. ஜெ. கணேஷ் கண்ணா அவர்கள் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி DDU-GKY மாநில திட்ட மேலாளர்கள் திருமதி. என். கவிதப்பிரியா, இணை இயக்குநர் / மாநில திட்ட அலுவலர் திரு. ஜி. குமரன், மாநில திட்ட மேலாளர் மற்றும் / DDU-GKY - தொழில் நுட்ப உதவி நிறுவன திட்ட மேலாளர் திரு. பத்மநாபன் மற்றும் அணியினர் பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திரு. ஜா. சம்பத் அவர்கள் நன்றியுரை நல்கினார்கள். மேலும், இணை இயக்குநர்கள், மக்கள் தொடர்பு அலுவலர், தொழில் பயிற்சி நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வேளாண் மகளிரின் விளை பொருட்களுக்கான விற்பனை கண்காட்சி

“தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் மூலம் வழங்கப்பட்ட Honey Comb Furniture Making பயிற்சியில், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத பொருட்களில் இருந்து பல்வேறு பொருட்களை தயாரிப்பது குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சி எனக்கு மட்டுமல்ல பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இப்பயிற்சியில் அறிந்து கொண்டவற்றை வைத்து பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்து, வருவாய் ஈட்ட எனக்கு வாய்ப்பு தந்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு எனது நன்றி.

– திருமதி. ஜெயலட்சுமி,
மதிநலம் மகளிர் சுய உதவிக்குழு,
சென்னை.”

மகளிர் மேம்பாட்டிற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள பல்வேறு திட்டங்களை, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. அதன் ஒருபகுதியாக தமிழகம் முழுவதிலுமுள்ள மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்தும் பணியினை மாவட்டங்களில் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்களும், மாநில அளவில் தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கமும் சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அதன்படி தற்போது இயற்கை வேளாண் பொருட்களுக்கான தேவையை பூர்த்தி செய்தல் மற்றும் அப்பொருட்களை உற்பத்தி செய்வோருக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்திடும் நோக்கில் தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மாதந்தோறும் முதல் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மகளிர் உயிர்ம வேளாண் சந்தை என்ற பெயரில் வேளாண் மகளிரின் விளை பொருட்களுக்கான விற்பனை கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து 06.09.2019 முதல் 08.09.2019 வரை நடைபெற்ற மகளிர் உயிர்ம வேளாண் சந்தையில், திண்டுக்கல் மற்றும் கடலூர் மாவட்டங்களில் இருந்து காய்கறிகள், தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து மாப்பிள்ளை சம்பா அரிசியில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள், சிவகங்கை மாவட்டத்திலிருந்து பாரம்பரிய அரிசி வகைகள், தேனி மாவட்டத்திலிருந்து சிறுதானியங்கள், வேலூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலிருந்து எண்ணெய் வகைகள், மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள், பனை ஓலை பொருட்கள், துணிப்பைகள், சணல் பைகள், மர பொம்மைகள் மற்றும் சென்னை மாநகராட்சியின் இயற்கை உரம் என 52 அரங்குகளில் சுமார் ரூ. 7 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இக்கண்காட்சியின் முதல் நாளில் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு Honey Comb Furniture Making பயிற்சி வழங்கப்பட்டு, அவர்களாலேயே தயாரிக்கப்பட்ட மேஜைகளில் (Table) பொருட்களை வைத்து கண்காட்சி நடத்தப்பட்டதை பாராட்டும் வண்ணம், பயிற்சி பெற்றவர்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திரு. பா. செல்வராஜன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் சான்றிதழ் வழங்கி பாராட்டினர். இவ்விழாவில் கூடுதல் இயக்குநர் திரு. ஜா. சம்பத் அவர்கள், திரு. சி. கே. வீரணன் அவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து இரண்டாம் நாள் மண்வாசனை மேனகா அவர்களின் பாரம்பரிய உணவு சமையல் கலை பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. பயிற்சியின் நிறைவில் பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு சித்த மருத்துவர் திரு. சிவராமன் அவர்கள் சான்றிதழ் வழங்கி, ‘உணவே மருந்து’ என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

உயிர்ம வேளாண் சந்தையின் மூன்றாம் நாளான ஞாயிற்றுக்கிழமையன்று மாடித் தோட்டம் அமைப்பது குறித்து முனைவர். சுல்தான் இஸ்மாயில், திரு. அலேக்ஸாண்டர் மற்றும் திரு. ராஜேந்திரன் ஆகியோர் மூலம் பயிற்சி வழங்கப்பட்டது.

வேளாண் மகளிரின் விளை பொருட்களுக்கான விற்பனை கண்காட்சியும், பல்வேறு பயிற்சிகளும் பொது மக்களிடையேயும், சுய உதவிக் குழு மகளிரிடையும் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

“

இன்றைய சூழ்நிலையில் மாடித் தோட்டம் என்பது மிக முக்கியமானமாக இருக்கிறது. சுய உதவிக் குழுவினரான எங்களுக்கு மாடித் தோட்டம் அமைப்பது குறித்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலுடன் தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் வாயிலாக வழங்கப்பட்டுள்ள பயிற்சி எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. மற்றவர்களுக்கும் பயனுள்ளதாக இருந்திருக்கும். இப்பயிற்சியை வழங்கிய அனைவருக்கும் நன்றி.

– திருமதி. விஜயா,
பாரதி மகளிர் சுய உதவிக்குழு,
சென்னை.

”

■ சேலம் மாவட்டம்

வட்டார அளவிலான வேலைவாய்ப்பு முகாம்

சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 21.09.2019 அன்று மேட்டூரில் உள்ள பெரியார் பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வட்டார அளவிலான வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் பாராளுமன்ற மேலவை உறுப்பினர் திரு. சந்திரசேகரன் அவர்கள், மேட்டூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள், சேலம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் திரு. சா. செல்வகுமார் அவர்கள் மற்றும் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேற்படி முகாமில் 1170 நபர்கள் கலந்து கொண்டனர். 36 தனியார் நிறுவனங்கள் பங்கேற்று 356 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் பணி ஆணைகளை வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

■ பெரம்பலூர் மாவட்டம்

சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம், பெரம்பலூர் நகராட்சி திடலில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களின் விற்பனை கண்காட்சியினை 16.10.2019 அன்று பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களைப் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் பெரம்பலூர் மாவட்ட ஊராட்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. எஸ். தெய்வநாயகி, பெரம்பலூர் நகராட்சி ஆணையர் (பொ) திரு. ஆர். ராதா, பெரம்பலூர் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் திரு. இரா. சங்கர், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சியில் பெரம்பலூர், திருச்சி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்தனர்.

■ திருச்சிராப்பள்ளி மாவட்டம்

பைசா போர்ட்டல் (Paisa portal) குறித்த பயிற்சி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் கீழ் பைசா

போர்ட்டல் (Paisa portal) குறித்த பயிற்சி 13.09.2019 அன்று திருச்சி பி. எல். ஏ. கிருஷ்ணா இன் ஹோட்டலில் நடைபெற்றது. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் டெல்லி பிரதிநிதி திரு. மாய்ங் மோகன் மிஸ்ரா அவர்கள் பயிற்சி அளித்தார். இந்தப் பயிற்சியில் அனைத்து மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் M.I.S (Analyst), கணினி இயக்குபவர்கள் மற்றும் வங்கி மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

■ திருவண்ணாமலை மாவட்டம்

போஷன் அபியான் திட்டம்

ஊட்டச்சத்து விழிப்புணர்வு விழா

திருவண்ணாமலை மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக 23.09.2019 அன்று திருவண்ணாமலை ஆண்டாள் சிங்காரவேலு திருமண மண்டபத்தில் போஷன் அபியான் திட்டத்தின் மூலம் ஊட்டச்சத்து விழப்புணர்வு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி விழாவினை துவக்கி வைத்ததுடன், பல்வேறு மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தயாரித்த பாரம்பரிய உணவுகளை கொண்டு அமைக்கப்பட்ட உணவு கண்காட்சியினை திறந்து வைத்து, மக்களிடையே ஊட்டச்சத்து குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தியவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இவ்விழாவில் திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. பெ. சந்திரா அவர்களுடன் உதவி திட்ட அலுவலர்கள், ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் களப்பகுதி வழிநடத்துநர்கள், சமுதாய வள பயிற்றுநர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர்.

மதராசபட்டினம் விருந்து

வாங்க ரசிக்கலாம், ருசிக்கலாம்

➜ மாவட்ட செய்திகள்

■ திருவள்ளூர் மாவட்டம்

ஊட்டச் சத்து தோட்டம் அமைக்க பழ மரக் கன்றுகள் மற்றும் விதைகள் வழங்குதல்

கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே சமச்சீரான ஊட்டச் சத்தினை உறுதி செய்யவும், இரத்த சோகை குறைபாட்டினை சரிசெய்யவும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வீட்டின் பின்புறத்தில் கீரை, முருங்கை, பப்பாளி, கறிவேப்பிலை, கொய்யா மற்றும் சப்போட்டா போன்ற சத்து மிகுந்த பலன் தரும் 'ஊட்டச்சத்து தோட்டம்' அமைக்கப்படும் என்றும், 2019-20ஆம் நிதியாண்டில் 2 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெறும் விதமாக 'ஊட்டச்சத்து தோட்டம்' அமைக்க 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். வேலுமணி அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்திருந்தார்.

அதன்படி இத்திட்டத்தை செயல்படுத்திட திருவள்ளூர் மாவட்டத்தில், திருத்தணி, இரா.கி.பேட்டை, பூண்டி, எல்லாபுரம் ஆகிய நான்கு வட்டாரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. முதற்கட்டமாக இத்திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் அடங்கிய பூண்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த போந்தவாக்கம் ஊராட்சியில் 24.09.2019 அன்று 1000, பழ மரக் கன்றுகள் மற்றும் கீரை விதை பொட்டலங்களை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வை. ஜெயக்குமார், ICDS திட்ட அலுவலர், மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார இயக்க மேலாளர், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 950 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

■ நாமக்கல் மாவட்டம்

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு வங்கித் தொடர்பான பயிற்சி

நாமக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மொத்தம் 68 சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் (CBC) பணிபுரிந்து வருகின்றனர். அதில் முதல் கட்டமாக 34 நபர்களுக்கு IIBF (Indian Institute of Banking Finance) நிறுவனத்தின் மூலம் 13 நாள் வங்கி பணி தொடர்பான பயிற்சி உண்டு மற்றும் உறைவிடப் பயிற்சியாக 09.09.2019 முதல் 20.09.2019 வரை நடைபெற்றது. இப்பயிற்சியினை 09.09.2019 அன்று நாமக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் மருத்துவர் இரா. மணி அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் உதவி திட்ட அலுவலர் பெ. அறிவழகன் மற்றும் IIBFன் பயிற்றுநர்கள் மற்றும் சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

■ நாமக்கல் மாவட்டம்

இளைஞர்களுக்கு பணி நியமன ஆணை வழங்குதல்

நாமக்கல் மாவட்டத்தில் படித்து வேலையில்லாத இளைஞர் இளம் பெண்களுக்கு DDU-GKY திட்டத்தின் கீழ் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரும் வேலை வாய்ப்பு முகாம், 04-09-2019 அன்று புதுச்சத்திரம் வட்டார சேவை மைய வளாகத்தில் நடைபெற்றது.

இம்முகாமில் கலந்து கொண்ட 216 நபர்களில் 113 நபர்கள் பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணி வாய்ப்பிற்குத் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு நாமக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. மணி அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் உதவி திட்ட அலுவலர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பு திறன் வளர்ப்பு மேலாளர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் தாங்கள் பெற்றுள்ள வெற்றிகளை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கின்றனர். இவர்கள் பகிர்ந்து கொள்ளும் செய்திகள் மற்றவர்களுக்கும் ஊக்கத்தினை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த வெற்றிக் கதைகள் இங்கே இடம் பெற்றுள்ளன.

தருமபுரி மாவட்டம்

ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழுவினரின் வெற்றிகரமான செயல்பாடுகள்

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், தித்தியோப்பனஅள்ளி ஊராட்சி, காசிகானப்பள்ளி கிராமத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ள 20 பெண்களும் நலிவுற்றோர் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு ஊக்குனர் பயிற்சி, தொழில் முனைவோர் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் மகளிர் திட்டம் மற்றும் ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளன.

இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் சுய தொழில் நடவடிக்கையாக கயிறு திரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். தங்களின் தொழிலினை மேலும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் தேவையான மூலதனம் வேண்டி ஊரக வாழ்வாதார இயக்கத்தினை ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் நாடினர்.

வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் 1.25 இலட்சம் ரூபாய் மானியத்துடன் ரூ. 5 இலட்சம் ரூபாய் பொருளாதாரக் கடனாக இக்குழுவிற்கு வழங்கப்பட்டது. இத்தொகையினை மூலதனமாகக் கொண்டு, கர்நாடக மாநிலத்தில் உள்ள கிராமப்புறங்களில் இருந்து தேவையான மூலப்பொருட்களை வாங்கி, குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் கயிறு உற்பத்தியில் ஈடுபட்டு அதிக அளவில் தரமான கயிறுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யத் துவங்கினர்.

ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் கயிறுகள் தருமபுரி, கிருஷ்ணகிரி, திருச்சி, சேலம், ஈரோடு, பெங்களூர், டெல்லி, பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய பகுதிகளில் விற்பனை செய்யப்படுகின்றன. இதன் மூலம் இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருகின்றனர்.

சிறிய அளவில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த தங்களுக்கு கடனுதவி வழங்கி பெரிய தொழில் முனைவோர்களாக உருமாற்றிய, தமிழ்நாடு அரசிற்கும், மகளிர் திட்டத்திற்கும், ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், அதன் அலுவலர்களுக்கும், ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம்

சிறப்பாக செயல்பட்டு வரும் காட்டாத்துறை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் ஒன்றியம், காட்டாத்துறை ஊராட்சியில் செயல்பட்டு வரும் காட்டாத்துறை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பல்வேறு வகையிலும் தன்னுடைய சிறப்பான செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெற்று வருகிறது.

இக்கூட்டமைப்பிற்கு பெருங்கடனாக ரூ. 1 கோடியே 80 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையினை இக்கூட்டமைப்பில் உறுப்பினராக இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களுக்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையினை பெற்ற குழுக்கள் வாழை நார் கூடை பின்னுதல், கோழி வளர்த்தல், சணல் பை தயாரித்தல், எம்பிராய்டரிங், தையல், டெக்ஸ்டைல்ஸ், நியாயவிலைக் கடை போன்ற தொழில்களை செய்து நீடித்த நிலைத்த வாழ்வாதாரத்தை உருவாக்கி உள்ளனர். அதுமட்டுமல்லாமல் DDU-GKY திட்டத்தின் மூலம் 20 இளைஞர்களுக்கு திறன் மற்றும் பணியமர்வு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

சொட்டு நீர் பாசனம், முழு சுகாதாரம், இலவச கண் சிகிச்சை முகாம், பணமில்லா பரிவர்த்தனை போன்ற விழிப்புணர்வு முகாம்கள் இக்கூட்டமைப்பு மூலம் நடத்தப்படுகின்றன. இதனால் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கிடையே தன்னம்பிக்கையும், ஒற்றுமையும் வளர்ந்துள்ளது. இத்தகைய சிறப்பான செயல்பாடுகளின் காரணமாக இக்கூட்டமைப்பிற்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

சிறப்பாக செயல்பட்டு வரும் காட்டாத்துறை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் ஆண்டு விழா கன்னியாகுமரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வே. பிச்சை அவர்களின் தலைமையில் 14.08.2019 அன்று கொண்டாடப்பட்டது. 81 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 1215 உறுப்பினர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர். விழாவின் போது நலத் திட்ட உதவிகளாக 12 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ. 2,40,000/ மும், 2 ஏழை மாணவர்களுக்கு படிப்பு செலவுக்கு ரூ. 2,000/மும் வழங்கப்பட்டது.

மதுரை மாவட்டம்

வெற்றிக்கு வழி வகுத்த வாழ்வாதாரத் திட்டம்

மதுரை மாவட்டம், மேலூர் ஒன்றியம், தனியாமங்கலம் ஊராட்சியில் வசித்து வரும் திருமதி. இந்திரா மகளிர் திட்டத்தினால் தனது வாழ்வு வளம் பெற்றதை கூறுகிறார். “நான் மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். மது போதைக்கு அடிமையான கணவர், 2 பெண் மற்றும் 1 ஆண் என மூன்று குழந்தைகளுடன் மிகவும் சிரமத்துடன் கூலி வேலை செய்து வாழ்ந்து வந்தேன். இந்நிலையில் எங்கள் பகுதியில் செயல்படும் ரோஜா மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக சேர்ந்தேன். சுய உதவிக் குழுவில் சேமிப்பு செய்து, உள்கடன் மற்றும் வங்கிக் கடன் பெற்று அந்தத் தொகையில் பால் மாடு வாங்கி, பால் விற்பனை செய்து வருவாய் பெறத் துவங்கினேன். எனது வறுமையும் நீங்கத் தொடங்கியது. எனது குழந்தைகளைப் படிக்க வைத்ததுடன், என் பெண் பிள்ளைகளுக்குத் திருமணமும் செய்து வைத்தேன்.

இந்நிலையில் எனது 2வது மகள் அவள் கணவரைப் பிரிந்து அவளும், அவளின் 3 குழந்தைகளும் என்

வீட்டிற்கு வந்து விட்டனர். எனது கணவர் குடிபோதையில் தற்கொலை செய்து கொண்டார். எனது நிலையினைக் கண்டு நான் உறுப்பினராக உள்ள குழு மற்றும் கூட்டமைப்பு எனக்கு உள்கடனாக ரூ. 30,000/ கொடுத்தனர். அந்தப் பணத்தை வைத்து என் வீட்டின் முன்புறத்தில் சிறிய அளவில் கடை ஒன்றினை துவக்கி, அதில் இட்லி, வடை, குளிர்பானம், பருத்திப்பால் போன்ற உணவுப் பொருட்களை விற்பனை செய்யத் துவங்கினேன். பின்னர் வெள்ளலூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் ரூ. 25,000/ கடனாகப் பெற்று, அந்தப் பணத்தில் சிறிய அளவில் பெட்டிக் கடை மற்றும் உணவகம் ஆரம்பித்தேன். எனது மகளும் எனக்கு உதவியாக இருக்கிறாள். அவளுடைய பிள்ளைகளையும் நன்கு படிக்க வைத்துக் கொண்டிருக்கிறாள்.

எங்களுக்கு வரும் வருமானத்தின் மூலம் அம்மா இரு சக்கர வாகனம் வாங்கி, விஷேசங்களுக்கு மொத்த ஆர்டரின் பெயரில் சாப்பாடு மற்றும் டிபன் தயாரித்து வழங்கி வருகிறேன். எனது மகனும் Diploma படித்து, அவனும் தற்போது மாதம் ரூ. 20,000/ ஊதியத்தில் வேலை பார்த்து வருகின்றான். என்னுடைய குடும்ப வாழ்வாதாரம் தற்போது நன்றாக உள்ளது. என்னுடைய குடும்பத்தை இந்த அளவிற்கு வந்ததற்கு மகளிர் திட்டம், ரோஜா சுய உதவிக் குழு, கூட்டமைப்பு மற்றும் வங்கி ஆகியவற்றிற்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடலூர் மாவட்டம்

தேக்கு மரக் கன்றுகள் வளர்ப்பில் ஈடுபட்டு வரும் கூட்டமைப்பு

கடலூர் மாவட்டம், காட்டு மன்னார்கோயில் ஒன்றியம், சித்தமல்லி கிராமத்தில் செயல்பட்டு வரும் மகளிர் குழு கூட்டமைப்பானது மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள் மகளிர் திட்டத்தின் வாயிலாக வழங்கப்பட்டுள்ள பல்வேறு தொழிற்பயிற்சிகளைப் பெற்று, தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவாய் பெற்று வருவதுடன், கூட்டமைப்பையும் வெற்றிகரமாக நடத்தி வருகின்றன. இக் கூட்டமைப்பின் சிறப்பான செயல்பாட்டிற்காக சிறந்த கூட்டமைப்பிற்கான விருதை பெற்றுள்ளது.

இக்கூட்டமைப்பின் உறுப்பினர்களாக உள்ள பெண்கள் தேக்கு மர நாற்றுகள் பயிரிட்டு தேக்கு மர கன்றுகளை வளர்த்து விற்பனை செய்து வருவாய் ஈட்டி வருகின்றனர். இந்தக் கூட்டமைப்பின் தலைவியாக செயல்பட்டு வரும் திருமதி. கலைச்செல்வி என்பவர் தனது கூட்டமைப்பின் வளர்ச்சிக்காக பாடுபடுவது மட்டுமின்றி, பல சமூகப் பணிகளையும் செய்து வருகிறார். இவரின் பணிகளைப் பாராட்டி 'சிறந்த பெண்மணி' என்ற விருதும் வழங்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம்

காமராஜர் மாற்றுத் திறனாளி குழுவின் வெற்றிக் கதை

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் ஒன்றியம், தட்டரஹள்ளி ஊராட்சி, ஒட்டப்பட்டி கிராமத்தில் காமராஜர் மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக் குழு 2015ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் மாற்றுத் திறனாளிகளாக இருப்பதால் வெளியிடங்களில் வேலைக்கு செல்வதற்கு மிகவும் சிரமப்பட்டு வந்தனர். இந்நிலையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி தட்டரஹள்ளி கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் இக்குழுவிற்கு வங்கிக் கடனாக ரூ. 50,000, CIF நிதி ரூ. 50,000-மும் வழங்கப்பட்டது வழங்கப்பட்டது. இந்தத் தொகையினை மூலதனமாகக் கொண்டு, இக்குழுவினர் தென்னை ஓலைகளை கொள்முதல் செய்து தென்னை துடைப்பம் தயாரித்து விற்பனை செய்து வருகின்றன. இந்த மாற்றுத் திறனாளிகள் தயாரிக்கும் துடைப்பங்களை உள்ளூர் சந்தைகள் மற்றும் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு நடத்தி வரும் கண்காட்சிகளில் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் வெளியூர் வியாபாரிகள் மொத்தமாகவும் சில்லரையாகவும் வாங்கிச் செல்கின்றனர். தற்போது இந்தத் தொழில் நடவடிக்கைகள் மூலம் காமராஜர் மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக் குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் கணிசமான வருவாய் கிடைத்து வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

மாற்றுத் திறனாளரின் மகிழ்ச்சி

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் ஒன்றியம், எம். புத்தூர் ஊராட்சியில் சத்திரம் என்கிற குக்கிராமத்தில் வசித்து வரும் ஆர். பழனியாண்டி (த/பெ. ரத்தினம்) ஆகிய நான் இரண்டு கால் ஊனமுற்ற மாற்றுத் திறனாளி. 12ஆம் வகுப்பு வரை படித்துள்ள நான் மிதிவண்டி பழுது நீக்கப் பயிற்சி பெற்றுள்ளேன். சொந்தமாக கடை வைக்க போதுமான பொருட்கள் வாங்க வசதி இல்லாமல் இருந்தேன். எனக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் எம். புத்தூர் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலமாக மாற்றுத் திறனாளி நலிவுற்றோருக்கு வழங்கும் வட்டியில்ல தனிநபர் கடன் வழங்கப்பட்டது. அந்தத் தொகையைக் கொண்டு மிதிவண்டி பழுது பார்க்கும் கடை வைத்துள்ளேன். இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு என்னுடைய தேவைகளை நானே பூர்த்தி செய்து வருகிறேன். இதற்கு முன்பு என்னுடைய தேவைகளுக்காக அடுத்தவரின் உதவியை நாடியிருந்தேன். தற்போது சொந்தமாக தொழில் செய்து என்னுடைய பொருளாதாரத்தை உயர்த்தி மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன். என்னை வாழ வைத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துப் கொள்கிறேன்.

முற்றக் கச்சேரி 2.0

அன்புள்ள முற்றம் வாசகர்களே

சுய உதவிக் குழுவின் ஊக்குநரான மதி, உறுப்பினர்களான கீதா, பாலா ஆகியோரிடையே நடைபெறும் உரையாடல்களும், உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு ஊக்குனர் அளிக்கும் விளக்கங்களும் முற்றக் கச்சேரி 2.0ல் இடம் பெறுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

இடம் : குழு அலுவலகம்,

கதாபாத்திரங்கள் : ஊக்குனர் மதி, உறுப்பினர்கள் கீதா, பாலா ஆகியோர்

மதி: கீதா நல்லாயிருக்கியா? பாலா எங்க?

கீதா: நல்லாயிருக்கேன் அக்கா... பாலா அவ மகள பஸ் ஏத்தி விட போயிருக்காங்க. இப்ப வர நேரந்தான்.

மதி: பாலா மக எந்த ஊருக்கு போறா?

கீதா: ஊருக்கு போகல, வேலைக்கு போறா...

மதி: வேலைக்கு போறதுக்கு எதுக்கு பஸ்ல போகணும்.

கீதா: பாலா பொண்ணு பக்கத்து ஊருல இருக்கிற கம்பெனிக்கு வேலைக்கு போறா, இதுநாள் வரை கம்பெனி வண்டியிலதான் போயிட்டு இருந்தா. இப்ப கம்பெனி வண்டிய நிறுத்திட்டாங்க. அதனால ஒரு வாரமா பஸ்லதான் வேலைக்கு போறா... அதோ பாலா வந்துட்டா மதி அக்கா...

மதி: வா பாலா, பொண்ணு வேலைக்கு போகலயா?

பாலா: இல்ல மதியக்கா... நாங்க போறதுக்குள்ள பஸ் போயிடுச்சி, அடுத்த பஸ்ல போனாலும் லேட்டாயிடும்னு இன்னைக்கு கம்பெனிக்கு லீவு போட்டுட்டாக்கா.

மதி: ஏதாவது ஒரு வண்டி வாங்கிட்டா நேரத்துக்கு வேலைக்கு போலாமில்லையா?

பாலா: வண்டி வாங்கற அளவுக்கு எங்கிட்ட பணம் இல்லையே...

மதி: வண்டி வாங்க இப்ப நாம பணமே தர வேண்டியதில்லை. அதுமட்டுமில்ல வண்டி வாங்க 25,000 ரூபா மானியம் தராங்க. தெரியுமா உங்களுக்கு?

பாலா: என்னது வண்டி வாங்க பணம் தர வேண்டாமா? அதுவும் நாம வண்டி வாங்க 25,000 ரூபா மானியம் தராங்களா? அது யாருக்கா?

கீதா: வண்டி வாங்க 25,000 ரூபா மானியமா? கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க மதியக்கா.

மதி: வேலைக்குப் போற பெண்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியம் தரும் திட்டத்துல, மானியம் தராங்க.

பாலா: அப்படியா? அந்தத் திட்டத்துல எப்படி

சேர்றது? கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க அக்கா.

மதி: தொலைநோக்கு பார்வை கொண்ட மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண்கள் தங்களோட வேலையிடங்களுக்கு போறதில் உள்ள சிரமங்களை நல்லா உணர்ந்ததனால நாட்டிலேயே முதன்முறையாக, வேலைக்கு போற மகளிர் இரு சக்கர வாகனங்கள் வாங்க 50 சதவீத மானியம் வழங்குற ஒரு அற்புதமான திட்டத்தை தேர்தல் வாக்குறுதியாக அறி விச்சாங்க. அதை இப்ப நம்ம மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் சிறப்பா செயல்படுத்தி வராங்க.

பாலா: அப்படியா...! ரொம்ப நல்லத் திட்டமா இருக்கே?

மதி: ஆமாம். இந்தத் திட்டம் மூலமா இருசக்கர வாகனம் வாங்க 50 சதவிகிதம் மானியம் தராங்க.

கீதா: என்னவோ 25,000 ரூபாய் மானியம் தரதா சொன்னீங்க... இப்ப 50 சதவிகிதம் மானியம்னு சொல்றீங்க...? எனக்கு ஒன்னுமே புரியலே. கொஞ்சம் விளக்கமாதான் சொல்லுங்களேன்.

மதி: ஆமா, நாம வாங்கும் இருசக்கர வாகனத்தின் மதிப்பில் 50 சதவிகிதம் அல்லது 25,000 ரூபாய் இதுல எது குறைவோ அதை மானியமா தராங்க. மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு மேற்கண்ட மானியத் தொகையை விட கூடுதலாக ரூ.6,250 சேர்த்து மொத்தம் 31,250/ ரூபாயை மானியமாக தராங்க.

பாலா: அடேங்கப்பா... நாம இந்த மானியம் வாங்க என்ன செய்யணும் அக்கா?

மதி: அம்மா இருசக்கர வாகன மானியம் வாங்க முதல்ல விண்ணப்பிக்கணும். பூர்த்தி செய்த விண்ணப்பங்களுடன் தேவையான சான்றிதழ்களை இணைச்சி அவர்கள் வசிக்கும் பகுதிக்கு உட்பட்ட வட்டாரம் / பேரூராட்சி / நகராட்சி / மாநகராட்சி அலுவலகங்களில் சமர்ப்பிக்கலாம்.

கீதா: விண்ணப்பத்தை தந்துட்டா வண்டி மானியம் தந்து விடுவார்களா?

மதி: உங்க விண்ணப்பத்தை பரிசீலித்து, கள ஆய்வு செய்து, தகுதியானதா இருந்தா உடனே உங்களுக்கு மானியம் கிடைக்கும். குறிப்பா உன்கிட்ட டூவீலர் லைசென்ஸ் இருக்கணும் அல்லது LLR பேட்ஜ் காப்பியாவது இருக்கணும்.

பாலா: வண்டி வாங்க மானியம் தராங்க. மீதி பணத்தை நாமதானே தரணும். அவ்வளவு பணத்துக்கு எங்க போறது?

மதி: ஆ... அப்படி கேளு... இப்படி நாம சிரமப்படக் கூடாதுன்னுதான், மானியத் தொகை போக மீதி பணத்தையும் வங்கி மூலமா கடனாத் தராங்க. மாசம் மாசம் தவணை தொகையை கட்டினாலே போதும்.

கீதா: அப்படியா...! ரொம்ப நல்லத் திட்டமா இருக்கே.

மதி: போன மாசம் நம்ம அன்னை தெரசா மகளிர் வளாகத்துல நடந்த நவராத்திரி விற்பனைக் கண்காட்சிய துவக்கி வைச்ச நம்ம மாண்புமிகு ஊராட்சித் துறை அமைச்சர் அவர்கள் அம்மா இருசக்கர வாகனம் வாங்க தரும் மானியத் தொகை போக மீதித் தொகையை வங்கி மூலமாக கடனாக தரப்படும் என்றும், அந்தத் தொகையை மாதத் தவணையா வங்கிக்கு திருப்பிச் செலுத்தலாம்முன்னு சொன்னார்.

பாலா: மகளிர் முன்னேற்றத்துக்காக நம்ம அரசு நல்ல பல திட்டங்கள தீட்டி வராங்க. நானும், கீதாவும் உடனே நம்ம ஊரு பேரூராட்சி ஆபீசுக்குப் போய் அம்மா இருசக்கர வாகன மானியத் திட்டத்துக்கான விண்ணப்பம் வாங்கப் போறோம். மதி அக்கா நீங்களும் கூட வாங்க அக்கா.

கீதா: ஆமா மதி அக்கா நீங்கக் கூட வந்தா எங்களுக்கும் கொஞ்சம் தெம்பா இருக்கும்.

மதி: கண்டிப்பா நான் உங்க கூட வந்து, அம்மா இருசக்கர வாகன மானியத் திட்டத்துக்கான விண்ணப்பத்தை வாங்கி அதை பூர்த்தி செஞ்சியும் தரேன். சரியா?

பாலா: ரொம்ப நன்றி அக்கா...!

மதி: எனக்கெதுக்கு நன்றி சொல்றீங்க? நமது முன்னேற்றத்துக்கு நல்ல திட்டங்களைத் தீட்டிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அவங்க நல்லாசியோட அந்தத் திட்டத்தையெல்லாம் சிறப்பா செயல்படுத்தி வர நம்ம மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், இந்தத் திட்டம் கடைக்கோடி தமிழகத்திற்கும் சேர பாடுபட்ட நம்ம மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும்தான் நீங்க நன்றி சொல்லணும்.

(முற்றக் கச்சேரி தொடரும்)

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை மற்றும் நலிவுற்ற மக்களின் வாழ்க்கையில் வளர்ச்சியை ஏற்படுத்தி, அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெரிதும் துணைபுரிந்து வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுவினர் தங்களின் வெற்றி குறித்து கூறுவதைக் கேட்போம் வாருங்கள்.

■ *கோயமுத்தூர் மாவட்டம்*

வளமான வாழ்வு தந்த நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

கோயமுத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் வார்டு எண் 64ல் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ஸ்ரீ அமுதசுரபி மகளிர் சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு தங்களின் வருவாயை பெருக்கி வருகின்றனர். இந்தக் குழுவில் உறுப்பினரான திருமதி. கிருஷ்ணவேணி இன்று பள்ளி ஒன்றில் சிற்றுண்டி கடை நடத்தி வருகிறார். தனது வாழ்வாதார வளர்ச்சி குறித்து கிருஷ்ணவேணி கூறும்போது,

“என் பெயர் கிருஷ்ணவேணி, நான் குழுவில் இணைவதற்கு முன் ஒரு பேக்கரி கடையில் வேலை செய்து வந்தேன். பின்னர் எங்கள் பகுதியில் துவக்கிய ஸ்ரீ அமுதசுரபி மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இணைந்தேன். எனக்கு குழுவில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டது. நான் ஏற்கனவே பேக்கரி கடையில் வேலை செய்து வந்ததால், அந்த அனுபவத்தைக் கொண்டு சிறிய அளவில் சிற்றுண்டிக் கடை ஆரம்பிக்கலாம் என்று விரும்பினேன். வார்டு எண் 65ல் செயல்பட்டு வரும் பள்ளியின் முதல்வரை சந்தித்து அவர்கள் பள்ளி வளாகத்தில் சிற்றுண்டி சாலை (கேண்டீன்) வைக்க அனுமதி பெற்றேன்.

என்னுடைய குழுவை சேர்ந்த இன்னொரு உறுப்பினரும் நானும் இணைந்து தற்போது அந்தப் பள்ளி வளாகத்தில் சிற்றுண்டி சாலை நடத்தி வருகிறோம். எங்களின் கடையில் சுவையான சிற்றுண்டி மற்றும் தின்பண்டங்களை சுகாதாரமான முறையில் தயாரித்து விற்பனை செய்து வருகிறோம். இதன் மூலம் எங்களுக்கு மாதம் ரூ. 7,000/ முதல் ரூ. 9,000/ வரை வருவாய் கிடைக்கிறது.

சாதாரண நிலையில் இருந்த எங்களை கடையின் முதலாளிகளாக மாற்றிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்”. என்று கிருஷ்ணவேணி மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

“சாதாரண நிலையில் இருந்த எங்களை கடையின் முதலாளிகளாக மாற்றிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களின் நன்றி!”

■ வேலூர் மாவட்டம்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் மகளிர் குழுவின் தையல் கடை

வேலூர் மாநகராட்சியில் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் டைமண்டு மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் பல்வேறு தொழிற்பயிற்சி பெற்று தனித்தனியாக தொழில் செய்து வருகின்றனர். இக்குழுவில் உறுப்பினராக உள்ள 6 பெண்கள் சிறிய அளவில் தையல் கடை நடத்தி வந்தனர். இந்நிலையில் மற்ற திட்டங்களிலிருந்து நிதியினைப் பெறும் Convergence UYEGP திட்டத்தின் கீழ் மாவட்ட தொழில் மையத்திலிருந்து ரூ. 1.90 இலட்சம் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெற்று அந்தத் தொகையினை மூலதனமாகக் கொண்டு, 5 நவீன தையல் இயந்திரங்களை வாங்கி தனது தொழிலை விரிவுபடுத்தி உள்ளார். இவர் தனது குழுவில் உள்ள தையல் தெரிந்த 3 நபர்களுக்கு தனது கடையில் வேலை வாய்ப்பு கொடுத்துள்ளார். இவர்கள் மகளிர் ஆடை தைப்பதில் பிரசித்தி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது நெகிழிப் பொருட்களுக்கும், நெகிழிப் பைகளுக்கும் அரசு தடை விதித்ததினால், துணிப்பைகளுக்கு அதிக வரவேற்பு உள்ளது. இதனைத் தொடர்ந்து வேலூர் மாவட்ட மகளிர் திட்டத்தின் மூலம் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட வெல்மா கார்மென்ஸ் நிறுவனத்திலிருந்து இக்குழுவின் உறுப்பினர்களுக்கு துணிப்பைகள் தைப்பதற்கு வேலூர் மாநகராட்சியின் வாழ்வாதார மையத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இத்தையல் நிலையம் தொய்வின்றி சிறப்பாக செயல்பாட்டு அதிக வருவாய் ஈட்டி வருகிறது.

■ கோயமுத்தூர் மாவட்டம்

காலணி தயாரிப்பில் சிறப்பாக செயல்படும் நிலா மகளிர் சிக்கன நாணய சங்கம்

கோயமுத்தூர் மாநகராட்சி, 22வது வார்டு, சாய்பாபா காலனியில் நிலா மகளிர் சிக்கன நாணய சங்கம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உறுப்பினராக உள்ள 12 பெண்களும் சுய தொழில் மேற்கொள்ள விரும்பினர். அதற்குத் தேவையான மூலதனம் இல்லாமல் இருந்தனர். குழுவினைச் சேர்ந்த 2 பெண்கள் வெளியில் அதிக வட்டிக்கு கடன் பெற்று தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆனாலும் கடன் தொல்லையால் சிரமப்பட்டனர். இந்நிலையில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் வங்கிக் கடன் வேண்டி கனரா வங்கி நுண்நிதிக் கிளையில் விண்ணப்பித்தனர். இவர்களின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இக்குழுவினருக்கு ஆறு இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டது. இத்தொகையினைக் கொண்டு, குழுவின் 6 உறுப்பினர்கள்

இணைந்து காலணிகளை தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் தயாரிக்கும் காலணிகள் தரமாக இருப்பதால் அனைவரும் விரும்பி வாங்குகின்றனர். மாதந்தோறும் இவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 9,000/ வரை வருவாய் கிடைக்கிறது. இக்குழுவினர் தாங்கள் வாங்கிய கடனையும் திரும்பச் செலுத்தி வருகின்றனர். தங்களுக்கு வங்கிக் கடன் பெற்றுத் தந்து சுய தொழில் மேற்கொள்ளச் செய்து மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற உதவிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு நிலா மகளிர் சிக்கன நாணய சங்கத்தின் உறுப்பினர்கள் தங்களின் நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றனர்.

உடலுக்கு நலம் தரும் சிறு தானியங்கள்!

இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கு நமக்கு உற்ற துணையாக இருப்பவை சிறுதானியங்கள். நம் முன்னோர்கள் ஆரோக்கியத்தோடு வாழ்ந்ததற்கு காரணம், அவர்கள் சிறுவயதில் சாப்பிட்ட சிறு தானிய உணவு வகைகளே. ஆனால் தற்போது நம் உணவு முறையிலும், உணவுப் பொருட்களிலும் ஏற்பட்ட மாற்றம், நமது ஆரோக்கியத்தையும் ஆயுளையும் சுருக்கி விட்டது. நமக்கு நலம் தரும் சிறு தானியங்கள் குறித்தும் அவை தரும் பலன்கள் குறித்தும் பார்க்கலாம்.

கம்பு, வரகு, சாமை, தினை, குதிரைவாலி, கேழ்வரகு, சோளம், கொள்ளு போன்றவையே சிறு தானியங்கள் ஆகும். இவை மிகக் குறுகிய காலத்தில், சாதாரண மண்ணில், வறட்சி நேரத்திலும் வளரக் கூடியவை. இவற்றில் புரதம், நார்ச்சத்து, கால்சியம், இரும்புச்சத்து, வைட்டமின்கள் போன்ற ஊட்டச் சத்துகள் அதிக அளவில் உள்ளன. எளிதில் ஜீரணமாகக் கூடிய தன்மையும், மனிதர்களைப் பாதிக்கும் பல நோய்களிலிருந்து பாதுகாக்கும் ஆற்றலும் கொண்டவை சிறு தானியங்கள் ஆகும்.

தினை

சிறுதானியங்களில் மிகவும் பழைமையானது தினை. இதன் உற்பத்தியில் இந்தியாவுக்கே முதல் இடம். இதயத்தைப் பலப்படுத்தவும், கண் பார்வை சிறப்பாக இருக்கவும் உறுதுணையாக இருக்கும். குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு தினையைக் கூழாக்கித் தருவார்கள்; அது, தாய்ப்பால் நன்கு சுரக்க உதவும். இது கபம் தொடர்பான நோய்களை நீக்கும். வாயுத் தொல்லையை விரட்டும்.

கேழ்வரகு / ராகி

குழந்தைகளாகட்டும்... பெரியவர்களாகட்டும் அனைவருக்கும் ஏற்றது கேழ்வரகு. கேழ்வரகில் ஊட்டச் சத்துகள் அதிகம் உள்ளதால் எலும்புத் தேய்மானம், ரத்த சோகை, இதய நோய், மலச்சிக்கல், சர்க்கரை நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டோருக்கு சிறந்தது. குழந்தைகளுக்கு நல்ல ஆரோக்கியத்தைத் தரும்.

சாமை

சாமையில் பலமடங்கு நார்ச்சத்து உள்ளதால், சர்க்கரை நோயாளிகளுக்கு மிகவும் உகந்தது. மற்ற சிறு தானியங்களைவிட சாமையில் இரும்புச் சத்து அதிகம். இது, ரத்த சோகையை நீக்க உதவும். மலச்சிக்கலைப் போக்கும். வயிறு தொடர்பான பிரச்னைகளுக்கும் நல்ல தீர்வைத் தரும்.

குதிரைவாலி

ஊட்டச் சத்துக்களும், சுவையும் நிறைந்த குதிரைவாலி, சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தக் கூடியது. இதன் கதிர் குதிரையின் வால் போன்ற அமைப்பைக் கொண்டிருப்பதால் இதற்கு 'குதிரை வாலி' என்ற பெயர்க் காரணம் ஏற்பட்டது. இதில் இரும்புச்சத்து, நார்ச்சத்து, சுண்ணாம்புச்சத்து புரதச் சத்தும் உயிர்ச்சத்தும் கூட அதிகமாக இருக்கின்றன. இதில் உள்ள நார்ச்சத்து, புற்றுநோய், உயர் ரத்த அழுத்தம், இதய நோய்களைத் தவிர்க்க உதவும்.

வரகு

வறட்சியான நிலத்தில்கூட விளையும் ஆற்றல் கொண்ட வரகு, உடலுக்கு அதிக சக்தியளிக்கும். இதில் நார்ச்சத்து, புரதம், தாது உப்புகள், பாஸ்பரஸ், மக்னீசியம், மாங்கனீஸ், காப்பர்,

இரும்புச்சத்து, கால்சியம், வைட்டமின் பி என அனைத்து சத்துக்களும் நிறைந்துள்ளன. சிறுநீரைப் பெருக்கும்; மலச்சிக்கலை போக்கும்; உடல் பருமனைக் குறைக்கும். ரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தும், உயர் ரத்த அழுத்தத்தைக் குறைக்கும், தேவையற்ற நச்சுகளை வெளியேற்றி ரத்த ஓட்டத்தைச் சீர்செய்யும் கல்லீரலைச் சீராக்கும், நரம்பு மண்டலத்தையும், எலும்புகளையும் பலப்படுத்தும் சிறப்பு வரகிற்கு உண்டு.

கம்பு

வைட்டமின்கள் நிறைந்த கம்பு, உடல் உஷ்ணத்தைக் குறைக்கும்; சோர்வை நீக்கி, புத்துணர்வு தரும்; அஜீரணக் கோளாறுகளைச் சரி செய்யும். வயிற்றுப் புண் வராமல் தவிர்க்கும். வளரும் குழந்தைகளுக்கும் பூப்பெய்திய பெண்களுக்கும் ஏற்றது. உடலுக்கு நன்மை தரும் கொழுப்பு இதில் உள்ளதால், இதய நோயிலிருந்து பாதுகாக்கும். மேலும் சிறுநீரைப் பெருக்கி, ரத்தத்தைச் சுத்தப்படுத்தும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

சோளம்

நார்ச்சத்து, புரதச்சத்து, மாவுச்சத்து நிறைந்தது சோளம். உடல் எடை அதிகரிக்க உதவும். ஆஸ்டியோபொரோசிஸ் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சோளத்தில் செய்த உணவுகள் சிறந்தவை. தோல் தொடர்பான நோய்கள், சொரியாசிஸ், தோல் ஒவ்வாமை உள்ளவர்களுக்கு சோளம் ஏற்றதல்ல. சர்க்கரை நோய் உள்ளவர்கள், செரிமானக் கோளாறு பிரச்னை இருப்பவர்கள், ரத்தசோகை இருப்பவர்களுக்கு சோளம் சிறந்தது. சிறுநீரைப் பெருக்கும்; உடலில் உள்ள உப்பைக் கரைக்கும். இதில் உள்ள பீட்டாகரோட்டின் கண் குறைபாடுகளைச் சரிசெய்ய உதவும்.

சிறு தானியங்களில் கஞ்சி, கூழ், களி, தோசை, பொங்கல், அடை, பிரியாணி, கொழுக்கட்டை, இனிப்பு, கார பலகாரங்கள் போன்ற பல சுவையான உணவுகளைத் தயாரிக்கலாம். நோயற்ற வாழ்க்கைக்கு வழிகாட்டும் சிறுதானியங்களை உணவில் சேர்த்துக் கொள்வோம். நமது பாரம்பர்யத்தைப் போற்றி வளர்ப்போம்.

தூய்மை பாரத இயக்கம்

தூய்மை பாரத இயக்கம் – அது
ஆரோக்கிய வாழ்வின் தொடக்கம்!
சுகாதாரக் கழிப்பறைப் பழக்கம் – இனி
என்றும் அதுவே நிலைக்கும்! (தூய்மை)

கழிப்பறையில்லா வீட்டினிலே
யார் தான் குடியிருப்பார்?
கழிப்பறை கட்டா மனிதர்களை
யார் தான் மதித்திருப்பார்?

ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத்
தொடருது இந்த அவலம் – இதை
மாற்றியமைத்து சாதனை செய்வதில்
அரசுகள் காட்டுது கவனம்!

திறந்தவெளியில் மலம் போனால்
நாடும், நகரமும் பாழாகும்,
வாந்தி, பேதி, வயிற்று வலி
வந்து உடம்பு வீணாகும்.

உடலுக்கும் மனதுக்கும் சுகம் தருமே
வீட்டில் கட்டிய கழிப்பறைகள்! – அதை
என்றும் மக்கள் பயன்படுத்த
பறந்து போகுமே நோய்நொடிகள்!

தூய்மை பாரத இயக்கத்தால்
மக்கள் மனதில் மாற்றங்கள்!
மனிதவள மேம்பாட்டில்
நாம் அடைந்தோம் ஏற்றங்கள்! (தூய்மை)

– ஜா. சம்பத்
கூடுதல் இயக்குர்
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

அம்மா இருசக்கர வாகனம் பெற்ற
பயனாளிகளின் மகிழ்ச்சி பகிர்வு

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருந்த பணிபுரியும் மகளிர் தங்களின் பணியிடங்களுக்கு சிரமமின்றி சென்று வருவதற்கு வசதியாக இருசக்கர வாகனம் வாங்க மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை ஆயிரக்கணக்காக பெண்கள் மானிய விலையில் இருசக்கர வாகனம் பெற்று இன்று சிரமமின்றி தங்களின் அன்றாட பணிகளைச் செய்து வருகின்றனர். மானிய விலையில் இருசக்கர வாகனம் பெற்ற பயனாளிகள் தங்களின் மகிழ்ச்சியை நம்முடன் பகிர்ந்து கொளகின்றனர்.

அரியலூர் மாவட்டம்

அரியலூர் மாவட்டம், வெங்கடகிருஷ்ணாபுரம் ஊராட்சி, கோனேரிராயபுரம் குக்கிராமத்தில் வசித்து வரும் எனது பெயர் அம்சவள்ளி (க/பெ. செல்வகுமார்) நான் எனது வீட்டில் இருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் கணினி இயக்குனராக பணி புரிந்து வருகிறேன். தினமும் பணியாற்றும் இடத்திற்கு பேருந்தில் சென்று வருவேன். இதனால குறிப்பிட்ட நேரத்தில் பணிக்கு செல்ல முடியாமல் சிரமப்பட்டு வந்தேன்.

இந்நிலையில் பணிக்கு செல்லும் பெண்களுக்கு மானிய விலையில் இரண்டு சக்கர வாகனம் வழங்கும் திட்டம் குறித்து தெரிந்து கொண்ட நான், இருசக்கர வாகனம் வேண்டி மனு செய்து, களப்பணி நேரடி விசாரணை அடிப்படையில் எனது மன தேர்வு செய்யப்பட்டு, எனக்கு அம்மா இருசக்கர வாகனம் வாங்குவதற்கு மானியம் அனுமதிக்கப்பட்டது. எனது குடும்பம் மிகவும் வறுமைகோட்டிற்கும் கீழ் உள்ள குடும்பத்தில் பிறந்து இருசக்கர வாகனம் வாங்க முடியுமா என்று கனவாகவே இருந்து வந்தது. நானும் அம்மா இருசக்கர வாகனம் வாங்க முடியும், பணி செய்யும் இடத்திற்கு குறித்த நேரத்திற்கு செல்ல முடியும் என்கின்ற எனது ஆசையை இத்திட்டத்தின் வாயிலாக பூர்த்தி செய்தது மட்டுமல்ல எங்கள் ஊரில் உள்ள மக்கள் மத்தியில் எனக்கு பெருமைக்குரிய விஷயமாக என்னை மதிப்புடன் பார்க்கும் பொழுது மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். எனக்கு இரு சக்கர வாகனம் வழங்கிய தமிழக அரசிற்கும், மகளிர் திட்டத்திற்கும் எனது நன்றிகளைச் சொல்லிக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம்

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் ஊராட்சி, மொளச்சூர் கிராமத்தில் வசித்து வரும் என் பெயர் நர்மதா. நான் சமுக சுய உதவி குழு பயிற்றுநராக பணிபுரிந்து வருவதால் நான் பல கிராமங்களுக்கு சென்று மக்களை காண வேண்டி உள்ளது. எங்கள் ஊரில் போக்குவரத்து வசதி அவ்வளவாக கிடையாது. எனவே, சில நேரங்களில் நடந்தே சென்று எனது பணிகளை செய்வதில் மிகவும் கஷ்டமாக இருக்கும். எனது பணிகளை உரிய நேரத்தில் செய்து முடிக்க சிரமப்பட்டேன். இந்நிலையில் தமிழ்நாடு அரசு வழங்கும் 'அம்மா இருசக்கர வாகனம் வழங்கும்' திட்டத்தின் மூலம் எனக்கு மானியம் ரூ.25,000/ வழங்கியதில் நான் மிகவும் பயன் அடைந்தேன். இருசக்கர வாகனம் வாங்கி நான் செல்ல வேண்டிய எல்லா கிராமங்களுக்கும் யாருடைய உதவியும் இல்லாமல் சரியான நேரத்திற்கு சென்று வர முடிகிறது. எனது வாழ்வில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அம்மா வாகனத்தின் மூலம் நான் தன்னம்பிக்கையுடன், பெருமையுடன் எனது வாழ்வை நல்ல முறையில் முன்னேற்ற பாதையில் செலுத்தி வருகிறேன். அம்மா இருசக்கர வாகனம் திட்டம் என் போன்ற பெண்களுக்கு பெரும் உதவியாக உள்ளது. இத்திட்டத்தின் மூலம் என் வாழ்க்கை முன்னேற்றம் அடைந்துள்ளது.

இத்திட்டத்தை அறிமுகப்படுத்திய தமிழக அரசுக்கும், மகளிர் திட்டத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இத்திட்டத்தால் அனைத்து மகளிரும் பயன்பெற வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம்

என் பெயர் அ. ராஜகனி, நான் திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டாரம், வெங்கட்ரெங்கபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எங்கள் ஊரில் உள்ள ரோஜா மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினராக உள்ளேன். எனக்கு சொந்தமாக தொழில் செய்ய விருப்பம் இருந்தது. அந்த சூழ்நிலையில் எங்கள் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் அம்மா இருசக்கர வாகன திட்டத்தை பற்றி எங்கள் குழு கூட்டத்தில் தெரிவித்தார்கள்.

நான் அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் பயன் பெற விண்ணப்பித்தேன். எனக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. தற்போது எனது இருசக்கர வாகனத்தில் பால் கேன்களைக் கட்டிக் கொண்டு, பால் வியாபாரம் செய்து வருகிறேன். நாள் ஒன்றுக்கு 7 கிராமங்கள் சென்று வருகிறேன். 350 முதல் 500 லிட்டர் பால் விற்று வருகிறேன். இதன் மூலம் எனக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. இன்று எங்கள் ஊரில் மதிப்பு மிக்க பெண்மணியாக வலம் வருகிறேன். எனக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கி உதவி செய்த தமிழக அரசுக்கும், மகளிர் திட்டத்திற்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

தருமபுரி மாவட்டம்

என் பெயர் சத்யா (க/பெ. சக்திவேல்), நான் தருமபுரி மாவட்டம், பென்னாகரம் ஊராட்சி ஒன்றியம், கெண்டையனஅள்ளி ஊராட்சியில் வசித்து வருகிறேன். கெண்டையனஅள்ளி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் கணக்காளராக பணியாற்றி வருகிறேன். அரசு நலத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது எனது பணியாகும். அதற்காக பேருந்து மற்றும் மிதி வண்டியில் பல்வேறு கிராமங்களுக்குச் சென்று வருவேன். இதனால் தகவல்களை சரியான நேரத்தில் மக்களிடம் கொண்டு சேர்க்க முடியவில்லை. இந்நிலையில் அம்மா இருசக்கர வாகன மானியத் திட்டம் குறித்து அறிந்து கொண்ட நான் அதற்காக விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வாங்கியுள்ளேன்.

தற்போது எனது பணியினை தாமதமின்றி செய்ய முடிகிறது. இதனால் எனக்கு நல்ல பெயரும் கிடைத்துள்ளது. எனக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மகளிர் திட்டத்திற்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகராட்சியில் வசித்து வரும் எனது பெயர் ராதிகா (க/பெ. வெங்கடேசன்). தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வரும் நான் தினமும் வேலைக்கு பேருந்தில் வந்து சென்றேன். இதனால் வீட்டு வேலைகளை முடித்து பணிக்கு செல்ல கால தாமதம் ஆகியதோடு, அது எனக்கு மிகவும் சிரமமாக இருந்தது.

தற்போது நமது பெண்களின் வளர்ச்சியில் முக்கியத்துவம் அளிக்கும் முன்னாள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உழைக்கும் மகளிருக்கான அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் என்னை பயனாளியாக தேர்வு செய்து இருசக்கர வாகனம் மானியத்துடன் வழங்கியதில் எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. இதனால் தினமும் காலை அவசர அவசரமாக புறப்பட்டு செல்லும் நான், தற்போது வீட்டு வேலைகளை முடித்துவிட்டு சிரமமின்றியும், காலதாமதம் ஏதும் இன்றியும் இருசக்கர வாகனத்தில் பணிக்கு சென்று வருகிறேன். எனக்கு அம்மா இருசக்கர வாகனம் வாங்கியது மிக மிக பயனுள்ளதாக உள்ளது என தெரிவித்துக் கொள்வதோடு தமிழக அரசுக்கும், மகளிர் திட்டத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

'அரிதரிது மானிடர் ஆதல் அரிது, மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது' என்பது ஆத்திச்சூடி தந்த ஔவையின் வாக்கு. மனிதர்களுக்கு செல்வம் என்பது பொன்னல்ல, பொருளல்ல, நோயற்ற வாழ்வே பெருஞ் செல்வம் என்பர் பெரியோர். எனவே உடல் நலத்தை காப்பது அவசியம். இருப்பினும் நோய் தாக்குதல் என்பது தவிர்க்க முடியாதது. நோய்களின் வகைகள், அதற்கான காரணங்கள், சிகிச்சை மற்றும் உணவு முறைகள் போன்றவை குறித்த விழிப்புணர்வை அனைவரும் பெற்றிட வேண்டும் இன்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

காய்ச்சல் ஏன்? என்ன செய்வது?

புயலுக்கு அடுத்தபடியாக புதிய புதிய பெயர்களில் தினம் ஒன்றாக அறிமுகமாவது காய்ச்சலாகத்தான் இருக்கும். உடல் வெப்ப நிலையை எகிறச் செய்கிற இந்தக் காய்ச்சல், சில நேரங்களில் வந்த சுவடே தெரியாமல் போய் விடும். பல நேரங்களில் உயிரைப் பறிக்கிற அளவுக்கு கோர முகத்தையும் காட்டும். அதனாலேயே குழந்தைகளுக்குக் காய்ச்சல் என்றாலே பல அம்மாக்களுக்கும் பீதி தலைக்கேறும்.

காய்ச்சல் என்பது என்ன?

உடலின் எதிர்ப்பு சக்தி இயக்கத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்படும் போது காய்ச்சல் வரும். காய்ச்சல் என்பது ஒரு வியாதியல்ல. அது ஒரு அறிகுறி. பாக்டீரியா அல்லது வைரஸ் கிருமி நம் உடலைத் தாக்கும் போது, இயற்கையிலேயே நம் உடலில் உள்ள எதிர்ப்பு சக்தி அந்தக் கிருமிகளை அழித்துவிடும். அந்த அழிவுப் போராட்டத்தின் ஒரு விளைவுதான் காய்ச்சல். பொதுவாக குழந்தைகளுக்கு 5-6 வயதுக்கு மேல்தான் எதிர்ப்பு சக்தியில் முன்னேற்றம் தெரியும். எனவே, அவர்களுக்குக் காய்ச்சல் வரும் போது, கூடவே வலிப்பும் வரலாம். இதற்கு 'ஃபெப்ரைல் ஃபிட்ஸ்' என்று பெயர். இந்த மாதிரிக் குழந்தைகளுக்கு அடுத்த முறை காய்ச்சல் வரும் போது அதிக கவனத்துடன் பார்த்துக் கொள்ள வேண்டும்.

காய்ச்சலுக்கான காரணங்கள்?

வைரஸ், பாக்டீரியா, பூஞ்சைத் தொற்றுகளின் காரணமாகவோ, கொசு, ஈ போன்றவை சுமந்து வந்து நம் உடலில் இறக்கும் கிருமிகளின் பாதிப்பினாலோ காய்ச்சல் வரலாம். நம் உடலிலுள்ள சில மென்மையான கொலாஜன் திசுக்கள், உடலிலேயே சில நச்சுப் பொருட்களால் அழிக்கப்படும் போதும் காய்ச்சல் வரலாம். இளவயதினருக்கு 'ருமாட்டிக் காய்ச்சல்' என ஒன்று வரும். இதற்குக் காரணமான பாக்டீரியாவானது முதலில் தொண்டையைப் பாதிக்கும். அதன் மூலம் இதய வால்வைத் தொற்றும். அப்படியே அலட்சியமாக விட்டால், இதய வால்வில் பிரச்னைகள் வளர்ந்து, ஒரு கட்டத்தில் இதயத்தின் செயல்பாட்டிலேயே பிரச்னைகளை ஏற்படுத்தும் அளவுக்குக் கொண்டு போகும். பெண்களுக்கு சிறுநீரகத் தொற்றின் காரணமாக காய்ச்சல் வரும். அது முதலில் முதுகுவலியாக வெளிப்பட்டு, பிறகு திடீரென காய்ச்சலாக உணரப்படும். காற்றின் மூலம் பரவும் நோய் என்பதால், இது ஏழை, பணக்காரர் வித்தியாசமின்றி யாரையும் தொற்றலாம்.

காய்ச்சல் வந்தால் என்ன செய்ய வேண்டும்?

லேசாக உடல் சூடானாலே போதும்... உடனே ஒரு பாராசிட்டமால் மாத்திரையை எடுத்துப் போடுகிற பழக்கம் பலருக்கும் இருக்கிறது. அது தேவையில்லை. இன்னும் சிலர் குழந்தைகளுக்கு காய்ச்சல் வரும் போது 3 மணி நேரத்துக்கொரு முறை பாராசிட்டமால் கொடுக்கிறார்கள். அதுவும் தவறு. 100 டிகிரியை தாண்டும் போது, சுத்தமான காட்டன் துணியை குளிர்ந்த தண்ணீரில் நனைத்துப் பிழிந்து, நெற்றி, அக்குள் பகுதிகளில் வைத்துத் துடைத்தாலே 80 சதவிகிதம் குணமடையும். தேவையில்லாமல் நாமாக மருந்துகள் எடுப்பதன் மூலம் தாமாக உற்பத்தியாகிற எதிர்ப்பு சக்தியை நாமாகவே கெடுக்கிறோம். 100 டிகிரிக்கு அதிகமான காய்ச்சலும், அதீத களைப்பும் இருந்தால் அல்லது காய்ச்சலுடன் கூடவே உளறல், குளிர், ஜன்னி போன்றவை இருந்தாலோ மருத்துவரை நாடுவதே பாதுகாப்பானது. தாமாகவே மருந்துக் கடைகளை அணுகி, மருந்துகளை வாங்கி சாப்பிடுவதும் தவறு. என்ன மாதிரியான காய்ச்சல், அதன் தீவிரம் என்ன என்பதைப் பொறுத்து, ஒரு மருத்துவரால்தான் சரியான மருந்துகளைப் பரிந்துரைக்க முடியும்.

என்னென்ன பரிசோதனைகள்?

தேவைப்பட்டால் மருத்துவரின் பரிந்துரையின் பேரில் ரத்தப் பரிசோதனை, சிறுநீர் மற்றும் மலம் பரிசோதனை, எக்ஸ்ரே போன்றவற்றை எடுக்கலாம்.

தடுப்பு முறைகள்

சிலவகை காய்ச்சல்களில் இருந்து தப்பிக்க தடுப்பு மருந்துகள் உள்ளன. உதாரணத்துக்கு டைஃபாய்டு, மலேரியா, ஹெபடைடிஸ், அம்மை போன்றவற்றுக்கு முன்கூட்டியே தடுப்பூசிகள் எடுத்துக் கொண்டால் அந்த நோய் வராது. அப்படியே வந்தாலும் தீவிரம் குறைவாக இருக்கும். வைட்டமின் மற்றும் மினரல் சத்து நிறைந்த காய்கறிகள், பழங்கள், கீரைகளை தினசரி உணவில் கட்டாயமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். காய்கறி, பழங்கள், கீரை போன்றவற்றை நன்றாகக் கழுவியே உபயோகிக்க வேண்டும். என்னதான் உயர் ரக வாட்டர் ஃபில்டர் இருந்தாலும், கொதிக்க வைத்த தண்ணீர்தான் 100 சதவிகிதம் பாதுகாப்பானது. ஃபாஸ்ட் ஃபுட் பழக்கத்தைக் குறைக்க வேண்டும். குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்கு காய் கறிகளை அவர்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒருவகையில் உணவில் சேர்த்துக் கட்டாயமாகக் கொடுத்துப் பழக்க வேண்டும்.



தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை நைஜீரியா நாட்டின் சமுதாய மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்ட அதிகாரிகள் குழு நேரடிக் களப்பார்வை

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை நேரடியாகக் களப்பார்வை செய்திட, நைஜீரியா நாட்டின் சமுதாய மற்றும் சமூக மேம்பாட்டு திட்ட அதிகாரிகள் குழு, தமிழ்நாட்டிற்கு 30.09.2019 முதல் 03.10.2019 வரை வருகை புரிந்தனர்.

இக்களப்பார்வையின் நோக்கமானது சமூகம் சார்ந்த வளர்ச்சியின் (CDD) அணுகுமுறை மூலம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக செயல்படுத்தப்படும் வாழ்வாதார செயல்பாடுகளை நேரடியாகக் களப்பார்வை செய்து அதன் மூலம் பெறப்படும் அனுபவங்களை உணர்வதாகும். இக்களப்பார்வையில் நைஜீரியா நாட்டின் சமுதாய மற்றும் சமூக மேம்பாடு திட்ட அலுவலர்கள் 18 நபர்கள் மற்றும் உலக வங்கி அலுவலர்கள் 2 நபர்கள் என ஆக மொத்தம் 20 நபர்கள் பங்கேற்றனர். இக்களப்பணம் உலக வங்கி ஆலோசகர் திரு. சோவிக் மித்ரா அவர்கள் வழிகாட்டுதலின் கீழ் நடைபெற்றது. முதல் நாள் நடைபெற்ற துவக்க விழா நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் / தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திட்ட

இயக்குநர் முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்ட முதன்மை செயல் அலுவலர் / தமிழ்நாடு மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் சிறப்புரையாற்றி, களப்பார்வையின் நோக்கம், தேவைகள் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் மூலம் அறிந்து கொள்ள வேண்டியவை குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் முதன்மை செயல் அலுவலர் (திறன் வளர்ப்பு) திரு. ஜா. சம்பத் அவர்களால், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக நிறுவன மேம்பாடு மற்றும் திறன் வளர்ப்பின் மூலமாக வழங்கப்படும்

பயிற்சிகள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலமாக செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்கள் மற்றும் சுய உதவிக் குழு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், வட்டார அளவிலான கூட்டமைப்பு ஆகியவை பற்றி தெளிவாக விளக்கிக் கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் முதன்மை செயல் அலுவலர் (கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு) திரு. சி. கே. வீரணன் அவர்கள் மிகப் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் வகைகள், சிறப்புக் குழுக்கள் அமைக்கும் வழிமுறைகள், முதியோர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கும் வழிமுறைகள், நலிந்தோர் நலிவு தீர்க்கும் நிதி போன்றவை குறித்து எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து முதல் மற்றும் இரண்டாம் நாள், நைஜீரியா நாட்டுக் குழுவினர் திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்களுக்கு நேரடி களப்பயணம் மேற்கொண்டனர். களப்பார்வையில் சுய உதவிக்

புத்தாக்கத் திட்ட ஆலோசகர் திரு. தேவக்குமார், வாழ்வாதார அனுபவங்களான கொல்லிமலை காபி மற்றும் மிளகு உற்பத்திக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட விதம், செயல்பாடுகள், பகுதி அளவிலான கூட்டமைப்பின் பங்கு மற்றும் சந்தை இணைப்பு அணுகுமுறைகள் குறித்து எடுத்துரைத்தார்.

நான்காம் நாள் நிகழ்வாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் இணை ஒருங்கிணைப்பாளர் (நுண்கடன்) செல்வி. நிரூபா ராணி அவர்கள் மற்றும் முதுநிலை ஆலோசகர் (நிதி உள்ளாக்கம்) திரு. திருநாவுக்கரசு ஆகியோர் சுய உதவிக் குழுக்கள் வங்கிக் கடன் இணைப்புத் திட்டம், நிதி உள்ளாக்கத்தின் தேவைகள் மற்றும் முக்கியத்துவம், பருவகால கடன், ரொக்கக் கடன், வட்டி மானியம் குறித்து பங்கேற்பாளர்களுக்கு எடுத்துரைத்தனர். மேற்கண்ட நிகழ்வினைத் தொடர்ந்து தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் முதன்மை செயல்

குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு போன்றவை செயல்படுத்தப்படும் வழிமுறைகளைப் பார்வையிட்டதுடன், உரிய சமுதாயம் சார்ந்த நிர்வாகிகளுடன் நேரடி கலந்துரையாடலும் மேற்கொண்டனர். திருவள்ளூர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் திட்ட இயக்குநர் திரு. வை. ஜெயக்குமார் மற்றும் வேலூர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் திட்ட இயக்குநர் திரு. சிவராமன் ஆகியோர் நைஜீரியா நாட்டுக் குழுவினரின் மாவட்ட களப்பயணத்திற்கும் உரிய ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

களப்பயணத்தினைத் தொடர்ந்து மூன்றாம் நாள் நிகழ்வில் உலக வங்கி ஆலோசகர் திரு. சோவிக் மித்ரா வாழ்வாதார செயல்பாடு பின்னடைவதற்கான காரணங்களான நிதிப்பற்றாக்குறை, போதிய திறன் இன்மை, சுற்றுச்சூழல் பாதிப்பு, போதிய வழிகாட்டு நெறிமுறைகள் இன்மை, அடிப்படை கட்டமைப்பு வசதியின்மை மற்றும் உற்பத்திப் பொருட்களை பதப்படுத்தும் வசதியின்மை ஆகிய தடைகள் குறித்து பங்கேற்பாளர்களுக்கு எடுத்துரைத்தார். தமிழ்நாடு ஊரக

அலுவலர் (வாழ்வாதாரம்) திரு. பா. செல்வராஜன் அவர்கள் வாழ்வாதார மேம்பாடு, பண்ணை சார்ந்த மற்றும் சாராத வாழ்வாதார செயல்பாடுகள், வாழ்வாதார செயல்பாடுகளை செயல்படுத்தும் அணுகுமுறைகள் குறித்தும், தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா திட்டத்தின் ஆலோசகர் திரு. பத்மநாபன் அவர்கள் ஊரகப் பகுதியில் உள்ள இளைஞர்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சி மற்றும் சாதனைகள் குறித்து விளக்கிக் கூறினர்.

களப்பயிற்சியின் நிறைவில் தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. தீபா ராஜ்கமல் அவர்கள் அனைத்துப் பங்கேற்பாளர்களின் கருத்துக்களையும் பெற்று, தொகுத்து வழங்கி நன்றியுரை வழங்கினார். இப்பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் செய்திருந்தது.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (68,200 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

இ-மதி இணையதளத்தின் சிற்றேடு வெளியீட்டு விழா

இ–மதி இணையதளமானது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்காக உருவாக்கப்பட்டுள்ள ஒரு மேலாண்மை தகவல் அமைப்பாகும். இ–மதி இணைய தளத்தின் பயன்பாடுகள் குறித்து அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ள சிற்றேட்டினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்/ தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் 23.09.2019 அன்று வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள் திரு. பா. செல்வராஜன், திரு. ஜா. சம்பத், இணை இயக்குநர்கள், பொது மேலாளர், நிதி ஆலோசகர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இ–மதி இணைய தளத்தின் சார்பில் வெளியிடப்பட்ட இந்த சிற்றேடு அனைத்து தரப்பினரும் எளிதில் புரிந்துக் கொள்ளும் வண்ணம் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த சிற்றேட்டில் இ–மதி இணைய தளத்தின் குறிக்கோள், பயன்பாடுகள், பலன்கள் குறித்தும் மற்றும் இ–மதி இணையதளம் செயல்படும் முறைகள், சிறப்பு அம்சங்கள் மற்றும் நன்மைகள் குறித்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இந்த இ–மதி இணையதளத்தின் மூலம், குழு உறுப்பினர்களின் சேமிப்பு, கடன் பெறுதல், திரும்ப செலுத்துதல், நிலுவை மற்றும் தாமதமாக செலுத்தும் உறுப்பினர்களின் விவரங்கள், குழுக் கூட்டம், உறுப்பினர்களின் வருகைப் பதிவு, கடன் சேமிப்பு வரலாறு, DCB சேமிப்பு மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் விவரங்கள், சுய உதவிக் குழுக்களின் மூலதனம், பயன்படுத்தப்படாத நிதி, இலாபம் மற்றும் தரம், நுண் நிதி திட்டம் குறித்த விபரங்கள், குழுக்களுக்கு வழங்கப்பட்ட நிதி ஆதாரங்கள், குழுக்களின் தர மதிப்பீடு, புதியதாக அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள் மற்றும் அவற்றின் நிலை, கடன் பயன்பாட்டு முறைகள் போன்றவற்றை எளிதில் அறிந்து கொள்வதுடன் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளும் செலவினங்கள் குறித்தும் அறிந்து கொள்ள முடியும்.

e மதி MATHI TAMIL NADU INDIA

eMathi

A Real-Time Transaction Based MIS for CBOs

Vision

To Capturing all CBOs transactions in to one folder and Bring all SHGs to a single database with a unique identity of SHG and its members. Transparent and proper maintenance of records of SHGs will facilitate in nurturing and strengthening of SHGs. Regular monitoring and follow-up of Loans by Banks & SRLM.

Current Usage

- 2.85 lakh SHGs
- 35 lakh Members
- 15,000 CSTs
- Started transactions for 2.25 lakh SHGs
- Continuous transactions for 1.50 lakh SHGs
- 13,192 VPRCs
- 12,689 PLFs

Digital empowerment increased among the communities.

Objective

Digitising the transaction of SHGs/CBOs to provide real time information for planning, implementing, monitoring and decision making at all levels of project management and Community Based Organisations (CBOs) specially for SHGs

Purpose & Priorities of Initiative

A real time database capturing the details of savings, loans, repayment, maintenance of Books of accounts etc., to enable the SHGs to have easier, quicker and higher quantum of Bank linkage"

Outcome

Transparency in the SHG activities has improved significantly after using the eMathi portal. Grading, Rating, Auditing of the Community Based Organisations have been easier now as the data is more reliable and authentic in the portal.

TNCDW

- Tamil Nadu Corporation for Development of Women (TNCDW) was established in 1983 by the Government of Tamil Nadu
- With the objective of social and economic empowerment of women through education, employment, economic development and self-reliance. Subsequently,
- The organisation became the nodal organisation for poverty alleviation programmes in both rural and urban areas.
- The SHG movement pioneered by TNCDW is the core strategy for poverty alleviation.
- The SHGs are governed by the Panchasutra principles viz.,

Regular Meeting 01
Regular Savings 02
Internal Lending 03
Regular Repayment 04
Maintenance Book of Accounts 05

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 1st Week of the every month

21-ம் ஆண்டில் வெற்றிநடை போடும்

முற்றம் இதழ்

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!

முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!

முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்	
ஒரு ஆண்டு	ரூ. 180
இரண்டு ஆண்டு	ரூ. 360
மூன்று ஆண்டு	ரூ. 540

விளம்பரக் கட்டணம்	
அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை ‘முற்றம்’ (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம்.
சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும். பரிசும் வழங்கப்படும்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
மேலாளர், முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 3வது மாடி,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.